# இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை — ஒரு விளக்கம்

முஹம்மத் பின் ஸாலிஹ் - அல் உஸைமீன்

தமிழில்:

மௌலவி K.J. மஸ்தான் அலீ பாகவி, உமரி
(அபூகாலித்)

The Cooperative Office For Call & Guidance to Communities at Naseem Area
Riyadh - Al-Manar Area - Front of O.P.D. of Al-Yamamah Hospital
Tel. 2328226 - 2350194 - Fax : 2301465
P.O. Box 51584 Riyadh 11553

TAMIL
65

ح مكتب دعوة وتوعية الجاليات بعنيزة ، ١٤١٨هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر
العثيمين ، محمد بن صالح
شرح أصول الإيمان / ترجمة مستان علي أبو خالد - عنيزة .
٩٦ ص ؛ ١٢ × ١٧ سم
ردمك : ٩٩٦٠ - ٧٨٣ - ٢٤ - ٣
(النص باللغة التاملية)
١ . الإيمان (الإسلام) ٢ . التوحيد أ . أبو خالد، مستان علي (مترجم) ب . العنوان
ديوي ٢٤٠ ١٨/٠٧٠٤

# பொருளடக்கம்

பக்கம்

★ முன்னுரை ........................................ 3
★ தீனுல் இஸ்லாம் ........................................ 4
★ இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ...... 10
★ இஸ்லாமியக் கொள்கையின் அடிப்படைகள் ........................................ 15
★ அல்லாஹ்வை நம்புவது - ஈமான் கொள்வது ........................................ 16
★ மலக்குமார்கள் மீது ஈமான் கொள்வது ....... 38
★ வேதங்களின் மீது ஈமான் கொள்வது ......... 45
★ ரஸூல்மார்களின் மீது ஈமான் கொள்வது .. 47
★ இறுதிநாளின் மீது நம்பிக்கை கொள்வது ... 56
★ விதியின் மீது நம்பிக்கை கொள்வது .......... 78
★ இஸ்லாமியக் கொள்கையின் இலக்குகள் .... 93

# இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை — ஒரு விளக்கம்


முஹம்மத் பின் ஸாலிஹ் - அல் உஸைமீன்

*தமிழில்:*

மௌலவி K.J. மஸ்தான் அலீ பாகவி, உமரி

(அபூகாலித்)

*மேலாய்வு:*

மௌலவி M.S. ஸெய்யித் முஹம்மத்

அன்வரி ஃபாஸில் பாகவி, *எம்.லிட். (மதீனா)*



*வெளியீடு:*

**இஸ்லாமிக் சென்டர்**

P.O.Box: 808,

உனைஸா, சவூதி அரேபியா

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

தௌஹீத் - ஏகத்துவக் கல்வி கல்விகளிலே சிறந்தது. உயர் அந்தஸ்துடையது; அதைத் தேடிப் பெறுவது நம்மீது கடமையாகும்! ஏனெனில் அது, அல்லாஹ்வையும் அவனுடைய பெயர்கள் - தன்மைகளையும் அவனுடைய அடியார்கள் அவனுக்கு செலுத்த வேண்டிய கடமைகளையும் பற்றிய அறிவாகும். அது மட்டுமல்ல, அல்லாஹ்விடம் கொண்டு சேர்க்கும் பாதையின் திறவுகோலாகவும் அவனுடைய ஷரீஅத் சட்டங்களுக்கு அடித்தளமாகவும் அது திகழ்கிறது.

இதனால்தான் இறைத் தூதர்கள் அனைவரும் ஏகத்துவத்தின் பக்கம் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:-

وَمَا أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ
لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ

"உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எந்தத் தூதரிடத்திலும் நிச்சயமாக என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. எனவே என்னையே நீங்கள் வணங்க வேண்டும் என்றே வஹியின் மூலம் நாம் அறிவித்திருந்தோம்." (21:25)

மேலும் ஓரிடத்தில் இறைவன் ஏகத்துவத்தைக் கொண்டு தனக்குத்தானே சாட்சியம் அளித்துள்ளான். அதைக் கொண்டு அவனுடைய மலக்குகளும் (வானவர்களும்) ஞானமுடைய வர்களும் சாட்சியம் அளித்துள்ளார்கள்:-

''வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதற்கு அல்லாஹ்வே சாட்சியம் அளித்துள்ளான். மேலும் அந்த வல்லமைமிக்க நுண்ணறிவா ளனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதற்கு மலக்குக ளும் அறிவுடையோரும் நீதி - நேர்மையில் நிலைத்த வண்ணம் சாட்சியம் அளித்துள்ளார்கள்.'' *(3:18)*

இத்தகைய அந்தஸ்து பெற்றுத் திகழக்கூடிய ஏகத்து வத்தை கண்ணும் கருத்துமாய் கற்பதும் கற்பிப்பதும் ஆராய்வ தும் நம்பிக்கை கொள்வதும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். அப்போதுதான் அவர்கள் தமது தீனை சீரான அடித்தளத்தின் மீது அமைத்திட முடியும். மன நிம்மதியுட னும் முழு விருப்பத்துடனும் அதனைப் பின்பற்றிட முடியும். அதன் நற்பயன்களையும் நல்விளைவுகளையும் கொண்டு நற்பேறு பெற்றிட முடியும்!

## தீனுல் இஸ்லாம்

தீனுல் இஸ்லாம் என்பது அல்லாஹ் எந்தத் தீனை வழங்கி முஹம்மத் (ஸல்) அவர்களை அனுப்பி வைத் தானோ அந்த தீன் ஆகும். அதனைக் கொண்டு ஏனைய தீன்களுக்கு அல்லாஹ் முடிவு கட்டினான்; தன் அடியார்களுக் காக அதனைப் பரிபூரணமாக்கினான். அதன் மூலம் தன் அருட்கொடைகளை அவர்களின் மீது நிறைவாக்கினான். அதனை ஒரு வாழ்க்கை நெறியாக அவர்களுக்காகப் பொருந் திக் கொண்டான்!

எனவே அந்த தீனை விடுத்து வேறொரு தீனை எவரிடம் இருந்தும் அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

*அல்லாஹ் கூறுகிறான்:*

*''(மக்களே,) முஹம்மத் உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர். ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கிறார். அல்லாஹ் ஒவ்வொன்றையும் அறிந்தவனாக இருக்கிறான்''.* ***(33:40)***

மேலும் கூறுகிறான்:-

''இன்று உங்களுடைய தீனை உங்களுக்காக நான் முழுமையாக்கி விட்டேன். எனது அருட்கொடையையும் உங்கள் மீது நான் நிறைவு செய்து விட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்களுடைய தீன் - மார்க்கமாக ஏற்றுக் கொண்டேன்.'' ***(5:3)***

மேலும் கூறுகிறான்:

''திண்ணமாக அல்லாஹ்விடம் (ஒப்புக் கொள்ளப் பட்ட) மார்க்கம் இஸ்லாம் மட்டுமே ஆகும்.'' ***(3:19)***

மேலும் கூறுகிறான்:

وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ
وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ ۝

''எவரேனும் இஸ்லாத்தை விடுத்து வேறொரு மார்க்கத்தை மேற்கொள்ள விரும்பினால் அவரிடமிருந்து ஒருபோதும் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் அவர் மறுமையில் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராக இருப்பார்.'' ***(3.85)***

இந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்து அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதை மக்கள் அனைவர் மீதும் அல்லாஹ் கடமையாக்கினான்.

*நபி (ஸல்) அவர்களை நோக்கி அல்லாஹ் கூறினான்:*

***''(முஹம்மதே) நீர் கூறும்: மனிதர்களே, திண்ணமாக வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியாகிய அல்லாஹ்வின் தூதராக நான் உங்கள் அனைவர் பாலும் அனுப்பப்பட்டுள்ளேன். அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனே வாழ்வையும் மரணத்தையும் கொடுக்கிறான். எனவே அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவனால் அனுப்பப்பட்ட உம்மீ நபி மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். அவரோ அல்லாஹ்வையும் அவனுடைய வார்த்தைகளையும் நம்புகிறார். மேலும் அவரைப் பின்பற்றுங்கள். அதனால் நீங்கள் நேர்வழி பெறக் கூடும்.''*** *(7:158)*

وَالَّذِي نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ، لَا يَسْمَعُ بِي أَحَدٌ مِنْ هَذِهِ الْأُمَّةِ يَهُودِيٌّ
أَوْ نَصْرَانِيٌّ ثُمَّ يَمُوتُ وَلَمْ يُؤْمِنْ بِالَّذِي أُرْسِلْتُ بِهِ إِلَّا كَانَ مِنْ
أَصْحَابِ النَّارِ.

*அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ''முஹம்மதின் உயிர் எவன் கைவசத்தில் இருக்கிறதோ அந்த இறைவன் மீது சத்தியமாக! இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த எவரொருவர் - யூதரோ, கிறிஸ்தவரோ — என்னைப் பற்றி கேள்விப்பட்டு பிறகு என் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட தூதுச் செய்தியை நம்பிக்கை கொள்ளாமல் மரணமாகிறாரோ அவர் நரகவாசிகளைச் சேர்ந்தவரே தவிர வேறில்லை'' — ஸஹீஹ் முஸ்லிம்*

*நபி (ஸல்) அவர்களின் மீது ஈமான் — நம்பிக்கை கொள்வதென்பது, அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தை உண்மைப்படுத்துவதாகும். அத்துடன் அதனை உளப்பூர்வமாக ஏற்றுக் கீழ்ப்படிந்திடவும் வேண்டும்.*

இதனால்தான், அபூதாலிப் — நபி (ஸல்) அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தை உண்மைப்படுத்தி மேலும் அதுவே சிறந்த மார்க்கம் என சாட்சியம் அளித்தும் கூட அவர் நபி மீது ஈமான் — நம்பிக்கை கொண்டவர் எனக் கருதப்படவில்லை.

இஸ்லாமிய மார்க்கம், முந்தைய மார்க்கங்கள் கொண்டிருந்த சிறப்புகள் — நலன்கள் அனைத்தையும் தாங்கி நிற்கிறது. அத்துடனே அது எல்லாக் காலத்திற்கும் எல்லாத் தேசத்திற்கும் எல்லா சமுதாய மக்களுக்கும் ஏற்ற மார்க்கமாக இருப்பதன் மூலம் — முந்தைய மார்க்கங்களைவிட சிறப்பு பெற்றும் திகழ்கிறது!

நபி (ஸல்) அவர்களை நோக்கி அல்லாஹ் கூறினான்: ''பிறகு, (நபியே) சத்தியத்தைத் தாங்கி வந்திருக்கும் இந்த வேதத்தை உம்மளவில் நாம் இறக்கினோம். இது, 'அல்கிதாபின்' அறிவுரைகளில் தன் முன்னே எவை எஞ்சி நிற்கின்றனவோ அவற்றை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் அவற்றைப் பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்கிறது.'' (5:48)

இஸ்லாம், எல்லாக் காலத்திற்கும் எல்லாத் தேசத்திற்கும் எல்லா சமுதாய மக்களுக்கும் ஏற்ற மார்க்கமாக திகழ்வதன் கருத்து யாதெனில், இஸ்லாத்தைப் பேணி நடப்பது — எக்காலத்திலானாலும் எத்தேசத்திலானாலும் — மக்களின் நலன்களுக்கு எதிராகாது! மாறாக, மக்கள் நலன்களுக்கு ஏற்றதாகவே இருக்கும்!

இதன் பொருள், இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் எல்லாத் தேசத்திற்கும் எல்லாச் சமுதாய மக்களுக்கும் கீழடங்கியிருக்கும் என்பதல்ல, மக்களில் சிலர் கருதுவது போன்று!

இஸ்லாமிய மார்க்கம் எத்தகைய சத்திய மார்க்கமெனில், அதை முறையோடு பேணி நடப்பவர்களுக்கு உதவிபுரியவும் மற்றவர்களை விட அவர்களை மேலோங்கச் செய்யவும் அல்லாஹ் பொறுப்பேற்றுள்ளான்!

அல்லாஹ் கூறுகிறான்:

''அவன்தான் தன்னுடைய தூதரை நேர்வழியுடனும் சத்திய மார்க்கத்துடனும் அனுப்பி வைத்தான்; ஏனைய மார்க்கங்களைவிட அதனை மேலோங்கச் செய்ய வேண்டும் என்பதற்காக! இணைவைப்பாளர்களுக்கு அது எவ்வளவு வெறுப்பாக இருந்தாலும் சரியே!'' (61:9)

மேலும் கூறுகிறான்:

''உங்களில் எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி அளிக்கின்றான். என்னவெனில், அவர்களைப் பூமியில் பிரதிநிதிகளாக்குவான்; அவர்களுக்கு முன்பிருந்த மக்களைப் பிரதிநிதிகளாக்கியது போன்று! மேலும் அவன் எந்த மார்க்கத்தை அவர்களுக்காக விரும்பினானோ அந்த மார்க்கத்தை வலுவான அடிப்படைகளின் மீது நிலைநாட்டுவான். மேலும் அவர்களின் (இன்று நிலவுகின்ற) அச்சநிலையை அமைதி நிலையாய் மாற்றித் தருவான். எனவே அவர்கள் என்னையே வணங்கட்டும்; என்னுடன் எதனையும் இணையாக்காதிருக்கட்டும்! இதன் பின்னர் எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களே பாவிகள் ஆவர்.'' (24:55)

இஸ்லாமிய மார்க்கம் என்பது, கொள்கையும் ஷரீஅத் - சட்டங்களும் கொண்டதாகும். அது தனது கொள்கையிலும் சட்ட திட்டங்களிலும் பரிபூரணமானதாகத் திகழ்கிறது.

1. ஓரிறைக் கொள்கையை வலியுறுத்துகிறது. இணைவைப்பைத் தடுக்கிறது
2. உண்மை பேசும்படி ஏவுகிறது; பொய்யைத் தடுக்கிறது.

3. நீதியை★ ஏவுகிறது; அநீதியைத் தடுக்கிறது.

4. நம்பிக்கை நாணயத்தை ஏவுகிறது; மோசடி செய்வதைத் தடுக்கிறது.

5. வாக்குறுதியை நிறைவேற்றும்படி ஏவுகிறது. வாக்கு மோசடியைத் தடுக்கிறது.

6. பெற்றோருக்கு நன்மை செய்ய ஏவுகிறது. அவர்களுக்குத் துன்பம் இழைப்பதைத் தடுக்கிறது.

7. உறவினர்களுடன் இணைந்து வாழும்படி ஏவுகிறது. உறவை முறிப்பதைத் தடுக்கிறது.

8. அண்டை வீட்டாருடன் அழகிய முறையில் நடக்க ஏவுகிறது. அவர்களுடன் தீய முறையில் நடப்பதைத் தடுக்கிறது.

பொதுவாகச் சொல்வதானால், இஸ்லாம், உன்னதக் குணவொழுக்கம் ஒவ்வொன்றையும் கடைப்பிடிக்க ஏவுகிறது. இழிக்குணம் அனைத்தையும் தடுக்கிறது.

நற்பணிகள் அனைத்தையும் மேற்கொள்ள ஏவுகிறது. தீய செயல் அனைத்தையும் தடுக்கிறது.

---

★ நீதி என்பது பரஸ்பரம் ஒத்த நிலையுடையவற்றிற்கு மத்தியில் சமத்துவம் செய்வதுதானே தவிர பரஸ்பரம் மாறுபட்ட பொருள்களுக்கு மத்தியில் சமத்துவத்தை வலிந்து திணிப்பதல்ல! சிலர் கூறுவது போன்று நீதி என்பது பொதுவான சமத்துவமல்ல. அவர்கள், இஸ்லாமிய மார்க்கம் 'சமத்துவ மார்க்கம்' என்று பொதுப்படையாகச் சொல்கின்றனர். உண்மையில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பொருள்களுக்கு மத்தியில் சமத்துவம் செய்வது அநீதியாகும். இஸ்லாம் அதைப் போதிக்கவில்லை. அப்படிச் செய்பவனைப் புகழவுமில்லை.

அல்லாஹ் கூறுகிறான்:-

إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ وَيَنْهَىٰ
عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ ﴿٩٠﴾

''திண்ணமாக அல்லாஹ் நீதி செலுத்தும்படியும் நன்மை செய்யும்படியும் உறவினர்களுக்கு ஈந்துதவும்படியும் கட்டளையிடுகிறான். மேலும் மானக்கேடான, வெறுக்கத்தக்க மற்றும் அக்கிரமமான செயல்களைத் தடுக்கின்றான். உங்களுக்கு அறிவுரை கூறுகிறான்; நீங்கள் படிப்பினை பெறும் பொருட்டு!'' (16:90)

## இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள்

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ஐந்து - அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள பின்வரும் நபி மொழியில் விவரிக்கப்பட்டுள்ளன:-

بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ، شَهَادَةِ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَنَّ مُحَمَّدًا
عَبْدُهُ وَرَسُولُهُ، وَإِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَصِيَامِ رَمَضَانَ
وَالْحَجِّ .

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து அடிப்படைகளின் மீது அமைக்கப்பட்டுள்ளது:

★ அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது - இன்னோர் அறிவிப்பில் வந்துள்ளது: வணக்கத்திற்குரிய இறைவன் அல்

லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மத் அவர்கள் அவனுடைய அடிமையும் தூதருமா வார்கள் என்றும் சாட்சியம் சொல்வது.

★ தொழுகையை நிலைநாட்டுவது,

★ ஜகாத் கொடுப்பது,

★ ரமளான் மாதம் நோன்பு நோற்பது,

★ ஹஜ் செய்வது

ஒரு மனிதர் கேட்டார்: ஹஜ் செய்வது (பிறகு) ரமளான் மாதம் நோன்பு நோற்பது (எனும் வரிசைப்படியா?)

அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள்: ''இல்லை, ரமளான் மாதம் நோன்பு நோற்பது, ஹஜ் செய்வது — நான் நபி (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டது இப்படித்தான்!''

— புகாரி, முஸ்லிம்

1. வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் முஹம்மத் நபி அவர்கள் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சி கூறுதல்:

இது ஓர் உறுதியான நம்பிக்கையாகும். இந்த சாட்சியத்தை மொழிந்து உறுதியை வெளிப்படுத்துபவன் - அதில் அவன் கொண்ட உறுதியின் காரணத்தால் - அதனை நேரில் கண்டவன் போல் இருக்கிறான்.

சாட்சியம் அளிக்கப்படும் விஷயங்கள் ஒன்றுக்கதிகம் இருப்பதுடன் சாட்சியம் அளிப்பது ஒரேயொரு கடமையாக ஆக்கி கணக்கிடப்பட்டிருப்பதன் காரணம்:-

அ. நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் இருந்து அறிவிக்கப்படும் செய்தியை எடுத்துச் சொல்பவர் ஆவார்கள். எனவே நபியவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சியம் சொல்வது 'லா இலாஹ

இல்லல்லாஹு' என்று சாட்சியம் அளிப்பதன் பரிபூரண நிலையாகும்.

ஆ. இந்த இரண்டு சாட்சியங்களும் செயல்கள் சீராவதற்கும் அவை ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் அடிப்படையாய் உள்ளன.

ஏனெனில் ஒரு செயல் சீர்பெறுவதும் ஒப்புக் கொள்ளப் படுவதும் இரண்டு தன்மைகளைப் பொறுத்தே உள்ளது. I அல்லாஹ்வுக்காகவே என தூய எண்ணத்துடன் நிறைவேற்றுவது. II அதில் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது.

அல்லாஹ்வுக்காகவே நிறைவேற்றுவதன் மூலம் — வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சாட்சியம் அளிப்பது உறுதியாகிறது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் — 'முஹம்மத் நபி அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள்' எனும் சாட்சியம் உறுதியாகிறது!

ஏகத்துவ சாட்சியத்தின் மகத்தான பலன் இது:

படைப்பினங்களுக்கு அடிமைப்பட்டிருப்பதிலிருந்தும் இறைத்தூதர்களை விடுத்து பிறரைப் பின்பற்றுவதிலிருந்தும் உள்ளத்தையும் உணர்வையும் விடுதலை பெறச் செய்தல்.

2. தொழுகையை நிலைநாட்டுதல்:

தொழுகையை உரிய நேரங்களில், உரிய அமைப்பில், நிலையாகவும் நிறைவாகவும் நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹ்வுக்கு அடிபணிவதாகும்.

தொழுகையின் பயன்களில் சில:

உள்ளம் தெளிவடைதல், கண்குளிர்ச்சி, வெறுக்கத்தக்க செயல்களில் இருந்தும் மானக்கேடானவற்றில் இருந்தும் ஒதுங்கி விடுதல்.

3. ஜகாத் கொடுத்தல்:

ஜகாத் கொடுக்கத்தக்க பொருள்களில் இருந்து கடமையான அளவினை வழங்குவதன் மூலம் அல்லாஹ்வுக்கு அடிபணிவதாகும்.

ஜகாதின் பயன்களில் சில:

(கஞ்சத்தனம் எனும்) இழிக்குணத்தில் இருந்து மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது, இஸ்லாத்தின் மற்றும் முஸ்லிம்களின் தேவை நிறைவேறுகிறது.

4. ரமளான் மாத நோன்பு:

ரமளானின் பகலில், நோன்பை முறிக்கக் கூடியவற்றைத் தவிர்ப்பது கொண்டு அல்லாஹ்வுக்கு அடிபணிவதாகும்.

நோன்பின் பயன்:

பிரியமானவற்றை விட்டு விடுவதற்கு மனத்தைப் பயிற்றுவிப்பது — அல்லாஹ்வின் திருப்தியைப் பெற நாடி!

5. கஅபா ஆலயத்தை ஹஜ் செய்தல்:

ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்ற சங்கைமிகு கஅபா ஆலயத்தை நாடிச் செல்வதன் மூலம் அல்லாஹ்வுக்கு அடிபணிவதாகும்.

ஹஜ்ஜின் பயன்களில் சில:

உடல் ரீதியான மற்றும் பொருள் ரீதியான முயற்சியையும் உழைப்பையும் — அல்லாஹ்வுக்கு அடிபணிவதில் செலவழிக்குமாறு மனத்தைப் பயிற்றுவிப்பது. இதனால் தான் ஹஜ் ஒருவகையான 'ஜிஹாத் ஃபீ ஸபீலில்லாஹ்'வாக அமைந்துள்ளது.

அடிப்படைக் கடமைகளின் ஒருசில பயன்களாகும் இவை. தவிர, நாம் குறிப்பிடாத வேறுபல பயன்களும் உள்ளன. இவைதாம் இந்தச் சமுதாயத்தை, தூய்மையான

இஸ்லாமியச் சமுதாயமாக — சத்தியமான முறையில் அல்லாஹ்வுக்கு அடிபணியக் கூடிய, மக்களுடன் நீதமாகவும் வாய்மையாகவும் நடந்து கொள்ளக்கூடிய சமுதாயமாக உருவாக்குகின்றன!

ஏனெனில் இவை தவிர உள்ள ஏனைய கடமைகள் — ஷரீஅத் சட்டங்கள் அனைத்தும் சீர் பெறுவது இந்த அடிப்படைக் கடமைகளின் சீர்மையைக் கொண்டுதான்! மேலும் இந்தச் சமுதாயம் சீரான நிலையில் இருக்க வேண்டுமானால் அதன் மார்க்க ரீதியான நடைமுறைகள் சீராக இருந்தால்தான் முடியும்! எந்த அளவுக்கு மார்க்க நடைமுறைகள் சீர்பெறாமல் போகின்றனவோ அந்த அளவுக்கு சமுதாயத்தின் நிலைகளும் சீர்குலைந்து போய்விடும்!

இதனைத் தெளிவாக அறிந்திட விரும்புவோர் பின்வரும் திருக்குர்ஆன் வசனத்தை வாசிக்கவும்:

''அவ்வூர்களில் வாழ்ந்த மக்கள் இறைநம்பிக்கை கொண்டு இறையச்சமுள்ள போக்கை மேற்கொண்டிருப்பார்களேயானால் வானம், பூமி ஆகியவற்றின் அருள்வளங்(களின் வாயில்) களை அவர்களுக்காக நாம் திறந்து விட்டிருப்போம். ஆனால் அவர்கள் சத்தியத்தைப் பொய்ப்படுத்தினார்கள். எனவே அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த தீய செயல்களின் காரணமாக அவர்களை நாம் தண்டித்தோம். இரவில் அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் நிலையில் நம்முடைய வேதனை அவர்களைத் திடீரெனத் தாக்காது என்று இவ்வூர்களில் வாழும் மக்கள் அச்சமற்றிருக்கிறார்களா? அல்லது பகலில் அவர்கள் வீண் விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே நம்முடைய வேதனை அவர்களைத் தாக்காது என்று இவர்கள் நிம்மதியுடன் இருக்கின்றார்களா? என்ன, இம்மக்கள் அல்லாஹ்வின் சூழ்ச்சி குறித்து அச்சமற்றிருக்கிறார்களா? உண்மையில், அழிந்து போகக்கூடிய மக்கள்தாம் அல்லாஹ்வின் சூழ்ச்சி குறித்து அச்சமற்றிருப்பார்கள்'' (7:99)

மேலும் முன்னர் வாழ்ந்து சென்ற மக்களின் வரலாற்றை அவர்கள் பார்க்கட்டும். ஏனெனில் வரலாற்றில், அறிவுடையோருக்குப் படிப்பினை இருக்கிறது. எவரது உள்ளத்தில் திரை விழவில்லையோ அவருக்கு அதில் தெளிவான சான்று உள்ளது!

## இஸ்லாமியக் கொள்கையின் அடிப்படைகள்:

மேலே சொன்னது போன்று இஸ்லாமிய மார்க்கம் கொள்கையையும் ஷரீஅத் சட்டங்களையும் கொண்டதாகும். அதன் சட்டங்களில் சிலவற்றை நாம் சுட்டிக் காட்டினோம். அச்சட்டங்களுக்கான அடிப்படைகளையும் கூறினோம்.

இஸ்லாமியக் கொள்கையின் அடிப்படைகள் பின்வரும் ஆறு நம்பிக்கைகளாகும்.

★ அல்லாஹ்வை நம்புவது.

★ அவனுடைய மலக்குகளை (வானவர்களை) நம்புவது.

★ அவனுடைய வேதங்களை நம்புவது.

★ அவனுடைய தூதர்களை நம்புவது.

★ மறுஉலகத்தை நம்புவது.

★ விதியின் அடிப்படையிலேயே நன்மை தீமை ஏற்படுவதை நம்புவது.

இந்த அடிப்படைகளை குர்ஆனும் நபிமொழியும் எடுத்துரைத்துள்ளன.

''புண்ணியம் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல. மாறாக அல்லாஹ்வையும் இறுதிநாளையும் மலக்குகளையும் வேதங்களையும் நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதே புண்ணியமாகும்.'' குர்ஆன் (2:177)

விதியைக் குறித்து குர்ஆன் ஓர் இடத்தில் கூறுகிறது:

''நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் ஒரு குறிப்பிட்ட விதியின்படி படைத்திருக்கிறோம். மேலும் நமது கட்டளை ஒரே ஒரு கட்டளைதான்; கண் இமைக்கும் நேரத்திற்குள் அது அமலுக்கு வந்துவிடுகிறது!'' (54:49)

நபிமொழி ஆதாரம் வருமாறு:

ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஈமானை பற்றி கேட்ட கேள்விக்கு நபி (ஸல்) அவர்கள் பதிலளிக்கும் போது கூறினார்கள்:

اَلْإِيْمَانُ أَنْ تُؤْمِنَ بِاللّٰهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ.

ஈமான் (நம்பிக்கை) என்பது அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் மறுமைநாளையும் நீர் நம்புவதும் விதியை - அதன் நன்மையையும் தீமையையும் நீர் நம்புவதும் ஆகும்.'' — முஸ்லிம்

## அல்லாஹ்வை நம்பிக்கை (ஈமான்) கொள்வது:

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது நான்கு விஷயங்களைக் கொண்டுள்ளது:

1. அல்லாஹ் இருப்பதாக நம்புவது.

இயல்பும், பகுத்தறிவும், இறைமார்க்கமும் புலன்களும் அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு சான்றாக உள்ளன.

அ. அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு இயல்பின் வழிகாட்டல்:

ஒவ்வொரு படைப்பினமும் தன்னைப் படைத்த இறைவனை நம்பும் உணர்வுடன் படைக்கப்பட்டுள்ளது. இந்நிலை, சிந்தனையூட்டலோ, கற்பித்தலோ எதுவுமின்றியே மனிதர்களிடம் அமைந்துள்ளது. எவனது உள்ளத்தில் திசைதிருப்பும் கருத்து புகுத்தப்பட்டதோ அவனைத் தவிர வேறு யாரும் இத்தகைய இயல்புணர்வின் தேட்டத்தில் இருந்து விலகுவதில்லை.

ஏனெனில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ مَوْلُودٍ إِلَّا يُولَدُ عَلَى الْفِطْرَةِ، فَأَبَوَاهُ يُهَوِّدَانِهِ أَوْ يُنَصِّرَانِهِ أَوْ يُمَجِّسَانِهِ.

'பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இறைவனை நம்பும் இயல்புடனேயே பிறக்கின்றன. ஆனால் அதன் பெற்றோர் தாம் அதனை யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ நெருப்பு வணங்கியாகவோ மாற்றி விடுகின்றனர்'' — புகாரி

ஆ. அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு பகுத்தறிவின் வழிகாட்டல்:

படைக்கப்பட்ட முந்தைய, பிந்தைய படைப்பினங்கள் அனைத்திற்கும் — அவற்றைப் படைத்த படைப்பாளன் ஒருவன் இருப்பது அவசியம். ஏனெனில், இப்படைப்பினங்கள் தம்மைத்தாமே உண்டாக்கிக் கொண்டன என்பது சாத்தியமற்றது. மேலும் அவை திடீரென உருவாக்கப்பட்டன என்பதும் சாத்தியமில்லை.

அவை தம்மைத்தாமே உண்டாக்கிக் கொள்வதற்கும் சாத்தியமில்லை என்று ஏன் சொல்கிறோமெனில், அது, முன்பு எப்பொருளாயும் இல்லாமலிருந்தது. அப்படியாயின் 'இல்லாமை' (மஃதூம்) என்பது படைக்கும் ஆற்றலுடையதாக எப்படி ஆகமுடியும்?

படைப்பினங்கள் தற்செயலாகப் படைக்கப்படுவதற்கு சாத்தியமில்லை என்று ஏன் சொல்கிறோமெனில், உண்டாகும் ஒவ்வொரு பொருளுக்கும் உண்டாக்கும் மூலகர்த்தா இருப்பது அவசியம்.

அதுமட்டுமல்ல, இந்தப் படைப்பினங்கள் இந்தப் புதுமையான அமைப்பில் அமைந்திருப்பதும் ஒருங்கிணைந்த கட்டுக்கோப்பான நிலையில் இருப்பதும் காரணங்களுக்கும் காரியங்களுக்கும் இடையிலான உறுதியான தொடர்பும் அண்டசராசரங்களுக்கிடையே — ஒன்று மற்றொன்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும் நிலையும் — இவை யாவும் இந்தப் பண்டப்பினங்கள் எல்லாம் தற்செயலாகத் தோன்றிவிட்டன என்பதை உறுதியாக மறுக்கின்றன! எதனாலெனில், திடுமெனத் தோன்றும் ஒருபொருள் அது அசலில் உருவாகும்போதே ஓர் ஒழுங்கமைப்புடன் இருப்பதில்லை. பிறகு நீடித்து நிற்கும் நிலையிலும் பரிணாம நிலையிலும் எப்படி அது ஒழுங்கமைப்புடன் திகழமுடியும்?

இந்தப் படைப்பினங்கள் தம்மைத்தாமே உண்டாக்கிக் கொள்ளவுமில்லை; தற்செயலாகத் தோன்றவுமில்லை எனும் போது இவற்றைப் படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என்பது உறுதியாகி விட்டது. அகில உலகங்களையும் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ் ஒருவன்தான் அவன்.

அறிவு ரீதியான இந்த ஆதாரத்தையும் உறுதியான அத்தாட்சியையும் 'அத்தூர்' அத்தியாயத்தில் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்.

''படைப்பாளன் யாருமின்றி தாமாகவே இவர்கள் படைக்கப் பெற்றுவிட்டார்களா? அல்லது இவர்கள் தங்களுக்குத் தாங்களே படைப்பாளர்களாய் இருக்கின்றார்களா?'' (52:35)

அதாவது இவர்கள் படைப்பாளனின்றி தாமாகப் படைக்கப்படவுமில்லை; அல்லது இவர்கள் தங்களைத் தாங்களே படைத்துக் கொண்டவர்களும் அல்லர்.

ஆக, எல்லாம்வல்ல அல்லாஹ்தான் அவர்களின் படைப்பாளன் என்பது உறுதியாகிவிட்டது.

இதனால்தான் ஜுபைர் இப்னு முத்யிம் (ரலி) அவர்கள் '—

''படைப்பாளன் யாருமின்றி தாமாகவே இவர்கள் படைக்கப் பெற்றார்களா? அல்லது தங்களுக்குத் தாங்களே படைப்பாளர்களாய் இருக்கின்றார்களா? அல்லது வானங்களையும் பூமியையும் இவர்கள் படைத்துள்ளார்களா? உண்மையாதெனில், இவர்கள் உறுதியான நம்பிக்கை கொள்வதில்லை. அல்லது உம் இறைவனின் கருவூலங்கள் இவர்களின் பிடியில் இருக்கின்றனவா? அல்லது அவற்றின் மீது இவர்களின் ஆதிக்கம்தான் நடைபெறுகிறதா?''

— எனும் அத்தூர் அத்தியாயத்தின் வசனங்களை நபி (ஸல்) அவர்கள் ஓதிடக் கேட்டபோது,

— அப்போது இணைவைப்பாளராக இருந்த ஜுபைர் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: ''எனது இதயம் சிறகடிக்கத் தொடங்கியது; என் உள்ளத்தில் ஈமான் இடம்பிடித்ததன் ஆரம்பம் இதுதான்''

— புகாரி

இதனை விவரிக்கக்கூடிய இன்னோர் உதாரணத்தை நாம் தருகிறோம்:

ஒரு மனிதர், நெடிதுயர்ந்த ஒரு மாளிகையைப் பற்றி உனக்குச் சொல்கிறார். அதனைச் சுற்றிலும் தோட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றிற்கிடையே ஆறுகள் ஓடுகின்றன. மாளிகையினுள் விரிப்புகளும் கட்டில்களும் போடப்பட்டிருக்கின்றன. மெருகூட்டும் வகையில் விதவிதமான அழகு

சாதனங்களைக் கொண்டு மாளிகை அலங்கரிக்கப்பட்டுள்ளது!

அந்த மனிதர் உன்னிடம் சொல்கிறார்:

'இந்த மாளிகையும் அதிலுள்ள அழகுச் சாதனங்களும் தம்மைத்தாமே உண்டாக்கிக் கொண்டன. மூலகருத்தா யாருமின்றி தற்செயலாக அவை வந்துவிட்டன!''

உடனே அவர் சொல்வது பொய் எனக் கூறி நீ மறுத்து விடுவாய். அந்த மனிதனின் பேச்சை பைத்தியக்காரத்தனமான உளறல் என்று கருதுவாய்.

இப்படியிருக்கும் போது —

பூமி, வானம், கோளங்கள், அவற்றின் நிலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தப் பரந்துவிரிந்த பேரண்டமும் பிரமிக்கத்தக்க, புதுமையான அதன் ஒழுங்கமைப்பும் படைப்பாளன் யாருமின்றி தானே உருவாகிவிட்டன அல்லது தற்செயலாகத் தோன்றிவிட்டன என்பது சாத்தியமாகுமா?

இ. இறைவன் இருக்கின்றான் என்பதற்கு இறைமார்க்கத்தின் ஆதாரங்கள்:

இறைவன் இறக்கிய வேதநூல்கள் அனைத்தும் இவ்வுண்மையை மொழிகின்றன.

மக்கள் நலன்களை உள்ளடக்கிய சட்டங்களை அவ்வேதங்கள் வழங்கியிருப்பது,

— நுண்ணறிவாளனும் மக்களின் நலன்களை நன்கறிந்தவனுமாகிய இறைவனிடம் இருந்துதான் அவ்வேதங்கள் அருளப்பட்டன என்பதற்கு ஆதாரமாகும்.

மேலும் பேரண்டத்தைப் பற்றி என்னென்ன செய்திகளை அவ்வேதங்கள் அளித்துள்ளனவோ அவை உண்மையானவைதான் என்று யதார்த்தநிலை சாட்சியம் அளித்திருப்பது,

— அவ்வேதங்கள் இறைவனால் இறக்கியருளப்பட்டவைதான் என்பதற்கும், தான் அறிவித்தவற்றை உண்டாக்கிட அவன் ஆற்றல் பெற்றவன்தான் என்பதற்கும் ஆதாரமாக உள்ளது.

ஈ. அல்லாஹ் இருக்கிறான் என்பதற்குப் புலன்கள் அளிக்கும் ஆதாரங்கள் இரண்டு கோணங்களிலாகும்.

ஒன்று:

பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதையும் துன்பத்திற்குள்ளானோர் காப்பாற்றப்படுவதையும் நாம் கேள்விப்படுகிறோம்; கண்கூடாகக் காண்கிறோம்.

அல்லாஹ் இருக்கிறான் என்று உறுதியாக அறிவிக்கும் ஆதாரங்களாகும் இவை.

அல்லாஹ் கூறுகிறான்:

وَنُوحًا إِذْ نَادَىٰ مِن قَبْلُ فَاسْتَجَبْنَا لَهُ فَنَجَّيْنَاهُ وَأَهْلَهُ
مِنَ الْكَرْبِ الْعَظِيمِ ۝٧٦

''(இதே அருட்பேற்றினை) நூஹுக்கும் நாம் வழங்கினோம். முன்னர் அவர் நம்மிடம் பிரார்த்தனை செய்ததை நினைவுகூரும். நாம் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம்.'' (21:76)

மேலும் கூறுகிறான்:

''உங்கள் இறைவனிடம் நீங்கள் உதவி கேட்டு முறையிட்டுக் கொண்டிருந்ததை நினைத்துப் பாருங்கள். அப்போது அவன் அதற்குப் பதிலளித்தான்.'' (8:9)

*அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:*

ஒருமுறை கிராமப்புற அரபி ஒருவர் ஜும்ஆ நாளில் வந்தார். நபி (ஸல்) அவர்கள் குத்பா பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். வந்தவர் முறையிட்டார்:

''அல்லாஹ்வின் தூதரே, சொத்துக்களெல்லாம் அழிந்து விட்டன. குடும்பத்தினரெல்லாம் பட்டினியாகி விட்டார்கள். எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள்.''

நபியவர்கள் இரு கரமேந்திப் பிரார்த்தனை செய்தார்கள். உடனே மேகங்கள், மலைகள் போன்று திரண்டன. நபியவர்கள் பிரசங்கமேடை — மிம்பரில் இருந்து கீழே இறங்குவதற்குள் மழைநீர் அவர்களின் தாடியிலிருந்து வழிவதை மக்கள் கண்டார்கள்.

இரண்டாவது ஜும்ஆவில் அதே கிராமப்புற அரபி (அல்லது வேறு ஒருவர்) எழுந்து சொன்னார்.

''அல்லாஹ்வின் தூதரே, கட்டடங்கள் இடிந்துவிட்டன. சொத்துக்களெல்லாம் நீரில் மூழ்கிவிட்டன. எங்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள்.''

உடனே நபியவர்கள் இருகரம் உயர்த்தி பிரார்த்தனை புரிந்தார்கள்:

'யா அல்லாஹ், எங்கள் சுற்றுப்புறங்களில் மழை பொழியச் செய்; எங்களின் மீது வேண்டாம்.'

நபியவர்கள் சுட்டிக்காட்டிய (வானத்தின்) மூலைகளில் மேகங்கள் உடனுக்குடன் கலைந்து செல்லலாயின. — புகாரி

பிரார்த்தனை செய்வோரின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவது இன்றுவரை கண்கூடாய்க் காணப்படும் நடைமுறை விஷயமாகும். எவர்கள் அல்லாஹ்விடத்தில் உண்மையிலேயே தஞ்சம் புகுந்து, பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதன் நிபந்தனைகளைப் பேணினார்களோ அவர்களின் பிரார்த்தனை ஏற்கப்படுகிறது!

இரண்டு:

நபிமார்களுக்கு வழங்கப்பட்ட சான்றுகள் — அவை முஃஜிஸாத் என்று சொல்லப்படுகின்றன; மக்கள் அவற்றை நேரடியாகக் காண்கிறார்கள்; அல்லது கேள்விப்படுகிறார்கள் — இத்தகைய சான்றுகள், அந்நபிமார்களை அனுப்பி வைத்த அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு உறுதியான ஆதாரங்களாகும்.

ஏனெனில் அந்த முஃஜிஸாக்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களாய் இருக்கின்றன. அல்லாஹ் தன்னுடைய தூதர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதற்காக அவற்றை நிகழ்த்திக் காட்டுகின்றான்.

உதாரணத்திற்கு — மூஸா நபிக்கு வழங்கப்பட்ட சான்று. தனது கைத்தடியைக் கொண்டு கடலினை அடிக்குமாறு மூஸா நபியை அல்லாஹ் ஏவினான். அவ்வாறே மூஸா நபி கடலினை அடித்தார்கள். அது பன்னிரண்டு உலர்ந்த பாதைகளாகப் பிளந்தது. அவற்றிற்கிடையே தண்ணீர் மலை போன்று நின்றது.

அல்லாஹ் கூறுகிறான்:

''நாம் மூஸாவுக்கு வஹியின் மூலம் கட்டளையிட்டோம், உமது கைத்தடியினால் கடலை அடியும் என்று! உடனே கடல் பிளந்தது. மேலும் அதன் ஒவ்வொரு பகுதியும் பெரும் மலை போன்றதாகிவிட்டது!'' (26:63)

இன்னோர் உதாரணம் — ஈஸா நபிக்கு வழங்கப்பட்ட சான்று. மரணம் அடைந்தோரை உயிர்ப்பிக்கக் கூடியவராகவும் மண்ணறைகளில் இருந்து வெளிக்கொணர்பவராகவும் அவர்கள் இருந்தார்கள்; அல்லாஹ்வின் அனுமதி கொண்டு!

இதுபற்றி அல்லாஹ் கூறுகிறான்:

''(மேலும் ஈஸா கூறினார்:) இறந்தவர்களை அல்லாஹ் வின் அனுமதி கொண்டு உயிர் பெற்றெழச் செய்வேன்'' (3:49)

மேலும் இறைவன் கூறுகிறான்:

''மரணித்தவர்களை எனது கட்டளைப்படி நீர் வெளிக் கொணர்பவராய் இருந்தீர்'' (5:110)

மூன்றாவது உதாரணம் — முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட சான்று. குறைஷிகள் சான்று ஒன்றை வேண்டிய போது நபியவர்கள் சந்திரனைச் சுட்டிக் காட்டினார்கள்; அது இரண்டாகப் பிளந்தது. அதனை மக்கள் கண்ணெதிரே கண்டனர். அது குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

''மறுமைக்கான நேரம் நெருங்கி விட்டது. மேலும் சந்திரன் பிளந்துவிட்டது. ஆனால் இந்த மக்கள் எந்தச் சான்றினைப் பார்த்தாலும் புறக்கணித்து விடுகிறார்கள். 'இது எப்போதும் நடைபெறுகிற சூனியம்தான்' என்றும் சொல்கி றார்கள்'' (54:1-2)

அல்லாஹ் தன்னுடைய தூதர்களுக்கு ஊக்கமும் உதவி யும் அளிப்பதற்காக நிகழ்த்திக் காட்டுகிற புலனுக்குட்பட்ட இத்தகைய சான்றுகள், அல்லாஹ் இருக்கின்றான் என்பதற்கு உறுதியான ஆதாரத்தை வழங்குகின்றன.

2. அல்லாஹ்வின் படைத்து பரிபாலிக்கும் ஆற்றலை நம்புவது (அதாவது, படைத்துப் பரிபாலிப்பவன் அவன் ஒருவனே; அவனுக்கு இணையாகவோ துணையாகவோ யாரும் இல்லை என்று நம்புவது)

ரப்பு: படைப்பாற்றல், ஆட்சியதிகாரம், கட்டளை பிறப் பிக்கும் அதிகாரம் ஆகியன உடையவன்.

எனவே அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் இல்லை. ஆட்சியதிபதி அவனைத்' தவிர வேறில்லை. கட்டளை பிறப்பிக்கும் அதிகாரி அவனைத்தவிர வேறு யாரும் இல்லை.

அல்லாஹ் கூறுகிறான்:

''அறிந்து கொள்ளுங்கள்! படைக்கும் ஆற்றலும் கட்டளைப் பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்குரியவை'' (7:54)

மேலும் கூறுகிறான்:

''அந்த அல்லாஹ்தான் உங்களின் இறைவன். ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியதாகும். அவனை விடுத்து நீங்கள் யார் யாரை அழைக்கிறீர்களோ அவர் ஓர் இம்மியளவுப் பொருளுக்கும் உரிமையாளர்கள் அல்லர்'' (35:13)

அல்லாஹ்வின் படைத்துப் பரிபாலிக்கும் ஆற்றலை மனிதர்களில் யாரும் மறுத்ததாக தெரியவில்லை; தான் சொல்வதைத் தானே நம்பாத வீண் பிடிவாதக்காரனைத் தவிர- ஃபிர்அவ்ன் கூறியது போன்று! அவன் தன்னுடைய சமுதாயத்தாரிடம் சொன்னான்:

''நான்தான் உங்களின் மாபெரும் இறைவன்'' (46:24)

''மேலும் சொன்னான்: ''அவையோரே, உங்களுக்கு என்னைத்தவிர வேறு இறைவன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை'' (28:38)

ஆயினும் இவ்வாறு சொல்வது, உறுதியான நம்பிக்கையின் பேரில் அல்ல!

அல்லாஹ் கூறுகிறான்:

''அவர்கள் முற்றிலும் அநியாயமான முறையிலும் ஆணவத்தினாலும்தான் அந்தச் சான்றுகளை மறுத்தார்கள். ஆனால் அவர்களின் உள்ளங்களோ அவற்றை ஏற்றுக் கொண்டிருந்தன!'' (27:14)

நபி மூஸா (அலை) அவர்கள் ஃபிர்அவ்னை நோக்கி கூறியதாக அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

''அதற்கு மூஸா கூறினார்: அகத்தெளிவை ஏற்படுத்தக்கூடிய சான்றுகளை வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியான அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இறக்கி வைக்கவில்லை என்பதை நீ நன்கறிவாய். ஃபிர்அவ்னே! நாசத்திற்குள்ளாகக் கூடியவனாகவே நான் உன்னைக் கருதுகிறேன்'' (17:102)

இதனால் இணைவைப்பாளர்கள், அல்லாஹ்வுடன் பிற வற்றை இணையாக்கியதோடு அல்லாஹ்வின் - படைத்துப் பரிபாலிக்கும் ஆற்றலை ஏற்றுக் கொள்வோராய் இருந்தார் கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

''(இவர்களிடம்) கேளும்: நீங்கள் அறிந்திருந்தால் பூமியும் இதிலுள்ள அனைவரும் யாருக்குரியவர்கள் என்பதைக் கூறுங்கள்'' திண்ணமாக அதற்கு அவர்கள் பதிலளிப்பார்கள்: அல்லாஹ்வுக்குரியவர்கள் என்று! பிறகு 'நீங்கள் ஏன் உணர்ந்து கொள்வதில்லை' என்று கேளும். ''ஏழு வானங்களின் உரிமையாளனும் மகத்துவமிக்க அர்ஷின் உரிமையாளனும் யார்?'' என்று இவர்களிடம் வினவுங்கள். 'அல்லாஹ்' என்றுதான் இவர்கள் அவசியம் பதில் கூறுவார்கள். 'பிறகு ஏன் நீங்கள் அஞ்சுவதில்லை' என்று கேளும். அவர்களிடம் கேளும்: ஒவ்வொரு பொருளின் மீதுள்ள அதிகாரம் யாருடைய கைவசம் இருக்கிறது? மேலும் அனைவருக்கும் அபயம் அளிப்பவனும் எவராலும் அபயம் அளிக்கப்பட தேவையில்லாதவனும் யார் என்று உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்! 'இவை அல்லாஹ்வுக்கே உரியனவாகும்' என்றுதான் அவசியம் அவர்கள் கூறுவார்கள். கேளும்: ''பிறகு எங்கிருந்து நீங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள்?'' (23:38)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

وَلَئِنْ سَأَلْتَهُمْ مَّنْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْأَرْضَ لَيَقُوْلُنَّ خَلَقَهُنَّ الْعَزِيْزُ الْعَلِيْمُ ۝

''வானங்கள், பூமி ஆகியவற்றைப் படைத்தவன் யார் என்று நீர் அவர்களிடம் கேட்பீராயின் 'வல்லமையும் பேரறிவும் கொண்ட (இறை)வன் தான் அவற்றைப் படைத்தான்' என்று அவர்கள் நிச்சயம் கூறுவார்கள்'' *(43:9)*

மேலும் கூறுகிறான்:

وَلَئِنْ سَأَلْتَهُمْ مَّنْ خَلَقَهُمْ لَيَقُوْلُنَّ اللّٰهُ فَأَنّٰى يُؤْفَكُوْنَ ۝

''இவர்களைப் படைத்தவன் யார் என்று நீர் இவர்களிடம் கேட்டால், 'அல்லாஹ்' என்று இவர்களே கூறுவார்கள். பிறகு எங்கிருந்து இவர்கள் திசை திருப்பப்படுகிறார்கள்?'' *(43:87)*

அல்லாஹ்வின் கட்டளை என்பது படைத்தல் ரீதியான கட்டளையையும் குறிக்கும்; மார்க்கச் சட்டரீதியான கட்டளையையும் குறிக்கும்.

அல்லாஹ் இந்தப் பேரண்டத்தை நிர்வகிப்பவனாக இருப்பதைப் போன்று—

அதில் தனது நுண்ணறிவின் தேட்டத்திற்கு ஏற்ப, தான் நாடியதைச் செயல்படுத்துபவனாக இருப்பதைப் போன்று-

தனது நுண்ணறிவின் தேட்டத்திற்கு ஏற்ப, உலகத்தில் வழிபாடுகளை (இபாதத்களை) கடமையாக்கி கட்டளையிடுபவனாகவும் நடைமுறை விவகாரங்களில் சட்டம் வகுப்பவனாகவும் இருக்கின்றான்!

எனவே, வழிபாடுகளில் மார்க்க விதி அளிப்பவனாக — நடைமுறை விவகாரங்களில் சட்டம் வகுப்பவனாக அல்லாஹ்வை விடுத்து வேறொருவனை எடுத்துக் கொள்ப வன் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தவனாவான். தனது ஈமானை — நிறைவுபடுத்தியவனாக மாட்டான்!

3. அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் என நம்புவது.

(அதாவது, அவன் ஒருவனே வணக்கத்திற்குரிய உண் மையான இறைவன். அவனுக்கு இணைதுணை இல்லை என நம்புவது)

அல்இலாஹ்: (அல்மஃலூஹ்) அதாவது, உள்ளன்புடனும் கண்ணியத்துடனும் வழிபாடு செலுத்தப்படும் இறைவன் என்று பொருள்!

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

''உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான். அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும் உடையோனாகிய அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை.'' (2:163)

மேலும் கூறுகிறான்:

شَهِدَ اللَّهُ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا هُوَ وَالْمَلَائِكَةُ وَأُولُو الْعِلْمِ قَائِمًا بِالْقِسْطِ
لَا إِلَٰهَ إِلَّا هُوَ الْعَزِيزُ الْحَكِيمُ ﴿١٨﴾

''வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதற்கு அல்லாஹ்வே சாட்சியம் அளிக்கிறான். மேலும் அந்த வல்லமைமிக்க நுண்ணறிவாள னைத் தவிர வேறு இறைவன் இல்லை என்பதற்கு மலக்குக ளும் அறிவுடையோரும் நேர்மையிலும் நீதியிலும் நிலைத்த வண்ணம் சாட்சியம் அளிக்கின்றனர்.'' (3:18)

அல்லாஹ்வுடன் இணைக் கடவுளாக ஏற்படுத்தப்படுகின்ற, அவனை விடுத்து வணங்கப்படுகின்ற ஒவ்வொன்றும் போலியானவையாகும்.

குர்ஆன் கூறுகிறது:

''இது ஏனெனில், அல்லாஹ்தான் உண்மையானவன். அல்லாஹ்வை விடுத்து இவர்கள் அழைக்கின்ற அனைத்தும் போலியானவை. மேலும் அல்லாஹ்தான் உயர்ந்தோனாகவும் மாபெரியோனாகவும் இருக்கின்றான்.'' *(22:62)*

அவற்றிற்கு 'கடவுள்' என்று பெயரிடுவதால் மட்டுமே அவை கடவுள் ஆகிவிடாது.

லாத், மனாத், உஸ்ஸா ஆகிய சிலைகள் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

''உண்மையில் இவையெல்லாம் நீங்களும் உங்கள் மூதாதையரும் வைத்துக் கொண்ட சில பெயர்களேயன்றி வேறெதுவுமில்லை. இவற்றிற்கு இறைவன் எந்த ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை.''★ *(53:23)*

நபி யூஸுஃப் (அலை) அவர்கள் தம்முடைய இரண்டு சிறைத் தோழர்களிடம் கூறியதை அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்.

''என்னுடைய சிறைத் தோழர்களே, (நீங்களே சிந்தித்துப் பாருங்கள்) பல்வேறுபட்ட கடவுளர் சிறந்தவர்களா?

---

★ வேறோர் இடத்தில் — ஹூத்நபி அவர்கள் தம் சமுதாயத்தார்களிடம் கூறியதை அல்லாஹ் இவ்வாறு எடுத்துரைக்கிறான்:

''நீங்களும் உங்கள் முன்னோர்களும் வைத்துக் கொண்ட பெயர்கள் குறித்தா என்னிடம் தர்க்கம் செய்கிறீர்கள்? அவற்றிற்கு எந்த ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்கி வைக்கவில்லை!'' *(7:71)*

அல்லது யாவற்றையும் அடக்கியாளுகிற ஏக இறைவனாகிய அல்லாஹ் சிறந்தவனா? அவனை விடுத்து எவற்றை நீங்கள் வணங்கி வருகிறீர்களோ அவையாவும் நீங்களும் உங்கள் மூதாதையர்களும் சூட்டிக் கொண்ட வெறும் பெயர்களே தவிர வேறொன்றும் இல்லை. அவற்றை வணங்குவதற்கு எத்தகைய ஆதாரத்தையும் அல்லாஹ் இறக்கி வைக்கவில் லை.'' (12: 39-40)

இதனால்தான் நபிமார்கள் தத்தம் சமூகத்தார்களிடம் இவ்வாறு சொன்னார்கள்: ''அல்லாஹ்வை வழிபடுங்கள். உங்களுக்கு அவனல்லாது வேறு இறைவன் இல்லை.''

ஆனால் இணைவைப்பாளர்கள் அதனை மறுத்தார்கள். அல்லாஹ் அல்லாத வேறு கடவுள்களை ஏற்படுத்தினார்கள். அல்லாஹ்வுடன் அவற்றையும் வணங்கினார்கள். அவற்றி டம் உதவி தேடினார்கள்; பாதுகாக்கவும் வேண்டினார்கள்.

இணைவைப்பாளர்களின் இந்தப்போக்கு சத்தியத்திற் குப் புறம்பானது என்பதை இருபெரும் ஆதாரங்களைக் கொண்டு அல்லாஹ் நிரூபித்தான்.

1. இவர்கள் ஏற்படுத்திக் கொண்ட இந்தக் கடவுள்களி டம் இறைமைக்கான சிறப்பம்சங்கள் எதுவும் இல்லை. அவை படைக்கப்பட்டவையே தவிர படைக்கக் கூடியவை அல்ல. தம்மை வழிபடும் மக்களுக்கு எவ்வித நன்மையும் அவை அளிப்பதில்லை. அவர்களைவிட்டு எந்தத் தீமையை யும் அவை தடுப்பதுமில்லை. அவர்களுக்கு வாழ்வு அளிக் கவோ மரணத்தைக் கொடுக்கவோ அவற்றால் முடியாது. வானங்களில் எதுவும் அவற்றின் ஆதிக்கத்தில் இல்லை. அதில் அவர்கள் பங்காளிகளாகவும் இல்லை.

அல்லாஹ் கூறுகிறான்:

''ஆனால் இவர்கள் அவனை விடுத்து எத்தகைய கடவு ளரை ஏற்படுத்திக் கொண்டார்களெனில், அவை எந்தப்

பொருளையும் படைப்பதில்லை. ஏன் அவர்களே படைக்கப் பட்டவர்களாக இருக்கிறார்கள். மேலும் தங்களுக்கே கூட எத்தகைய நன்மையையும் தீமையையும் அளிக்கும் அதிகா ரத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை. மேலும் மரணிக்கச் செய்யவும் உயிர் கொடுக்கவும் (இறந்தவர்களை) மீண்டும் எழுப்பவும் அவர்களால் இயலாது.'' *(25:3)*

மேலும் கூறுகிறான்:

''(நபியே இந்த இணைவைப்பாளர்களிடம்) கூறும்: அல்லாஹ்வை விடுத்து உங்களின் கடவுளர்களாக நீங்கள் யாரைக் கருதுகிறீர்களோ அவர்களை அழைத்துப் பாருங்கள். அவர்கள், வானங்களிலோ பூமியிலோ உள்ள அணுவளவுப் பொருளுக்கும் உரிமையுடையவர்களல்லர். வானம் மற்றும் பூமியின் உடைமையில் அவர்கள் பங்காளியாகவும் இல்லை. அவர்களில் யாரும் அல்லாஹ்வுக்கு உதவி புரிபவர்களாயும் இல்லை. மேலும் அல்லாஹ்விடத்தில் எந்த ஒரு பரிந்துரை யும் யாருக்கும் பயனளிக்க முடியாது - யாருக்கு அல்லாஹ் பரிந்துரை வழங்க அனுமதி தந்திருக்கின்றானோ அவரைத் தவிர!'' *(34:22)*

மேலும் கூறுகிறான்:

''எப்பொருளையும் படைக்க முடியாதவற்றையா அவ னோடு இணைவைக்கிறார்கள் இவர்கள்! அவையே (இறைவ னால்) படைக்கப்பட்டவை தாமே! இவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய அவற்றால் இயலாது. ஏன், தமக்குத் தாமே உதவி செய்யும் நிலையில்கூட அவை இல்லையே!'' *(7:192)*

இதுதான் அந்தக் கடவுளர்களின் நிலைமை எனும்போது அவற்றைக் கடவுளாகக் கருதுவது மிகப்பெரிய மடமையும் மிகப்பெரிய அசத்தியமும் ஆகும்!

2. இந்த இணைவைப்பாளர்கள் படைத்துப் பரிபாலிப் பவன் அல்லாஹ்தான்; ஒவ்வொரு பொருளின் முழு அதிகார

மும் அவன் கைவசமே உள்ளது; அவன் அபயம் அளிக்கி றான்; அவனுக்கு எதிராக அபயம் அளிக்கப்பட மாட்டாது என்பதை ஏற்றுக் கொள்ளவே செய்கிறார்கள்.

இது —

அவன் ஒருவனையே வணக்கத்திற்குரிய இறைவனாக அவர்கள் ஏற்றிட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது; படைத்துப் பரிபாலிப்பவன் அவன் ஒருவனே என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டது போன்று!

அல்லாஹ் கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱعْبُدُوا۟ رَبَّكُمُ ٱلَّذِى خَلَقَكُمْ وَٱلَّذِينَ مِن قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ ﴿٢١﴾ ٱلَّذِى جَعَلَ لَكُمُ ٱلْأَرْضَ فِرَٰشًا وَٱلسَّمَآءَ بِنَآءً وَأَنزَلَ مِنَ ٱلسَّمَآءِ مَآءً فَأَخْرَجَ بِهِۦ مِنَ ٱلثَّمَرَٰتِ رِزْقًا لَّكُمْ فَلَا تَجْعَلُوا۟ لِلَّهِ أَندَادًا وَأَنتُمْ تَعْلَمُونَ ﴿٢٢﴾

''மனிதர்களே, உங்களையும் உங்களுக்கு முன் வாழ்ந்து சென்றவர்களையும் படைத்த உங்கள் இறைவனை வணங்கி வழிபடுங்கள். (அவ்வாறு செய்வதனால் மட்டுமே) நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ள முடியும். அவனே உங்களுக்கா கப் பூமியை விரிப்பாகவும் வானத்தை முகடாகவும் ஆக்கி னான். அவனே வானத்திலிருந்து மழையைப் பொழியச் செய்து அதைக் கொண்டு உங்கள் உணவுக்காக விளைபொ ருள்களை வெளிப்படுத்தினான். எனவே (இவற்றையெல் லாம்) நீங்கள் அறிந்திருந்தும் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்'' (2:21-22)

மேலும் கூறுகிறான்:

''இவர்களைப் படைத்தவன் யார் என்று நீர் இவர்களிடம் கேட்டால் ''அல்லாஹ்'' என்று இவர்களே கூறுவார்கள். பிறகு எங்கிருந்து இவர்கள் திசை திருப்பப்படுகிறார்கள்?'' *(43:87)*

மேலும் கூறுகிறான்:

''(நபியே இவர்களிடம்) கேளும்: வானத்திலிருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் யார்? மேலும் உங்களிடமுள்ள கேட்கும் மற்றும் பார்க்கும் ஆற்றல்கள் யாருடைய அதிகாரத்தில் உள்ளன? மேலும் உயிரற்றதிலிருந்து உயிருள்ளதையும் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதையும் தோற்றுவிப்பவன் யார்? உலகத்தின் ஒழுங்கமைப்பை நிர்வகிப்பவன் யார்?'' அதற்கவர்கள் 'அல்லாஹ்' என்றுதான் பதில் கூறுவார்கள். அவ்வாறாயின் நீங்கள் (உண்மைக்கு மாறாக நடப்பதை) தவிர்த்துக் கொள்ளக் கூடாதா? என்று கேளும். ஆகவே இந்த அல்லாஹ்தான் உங்கள் உண்மையான இறைவன். இந்த உண்மையைக் கைவிட்ட பிறகு வழிகேட்டைத் தவிர வேறென்ன எஞ்சியிருக்கும்? நீங்கள் எங்கு திசை திருப்பப்படுகிறீர்கள்?'' *(10:32)*

4. அல்லாஹ்வுடைய பெயர்களையும் அவனுடைய குணங்களையும் நம்புவது. அதாவது, அல்லாஹ் தனது வேதத்தில் தனக்கு என்னென்ன பெயர்களை - குணங்களைக் கொடுத்துள்ளானோ அல்லது நபி (ஸல்) அவர்கள் தம் ஹதீஸ்களில் விளக்கியுள்ளார்களோ அவற்றை அப்படியே அல்லாஹ்வுக்கு கொடுப்பது - அவற்றை மாற்றாமல், வெறுமையாக்காமல், எந்தவிதத்தில் என விவரிக்காமல், உவமைப் படுத்தாமல் அவனது மகத்துவத்திற்கு ஏற்ற முறையில் கொடுப்பது!

அல்லாஹ் கூறுகிறான்:

''அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. எனவே அவற்றைக் கொண்டே அவனை அழையுங்கள். மேலும்

அவனுக்குப் பெயர்கள் வைப்பதில் வழிபிறழ்ந்து செல்பவர் களை விட்டுவிடுங்கள். தாங்கள் செய்து கொண்டிருக்கும் செயல்களின் கூலியை அவர்கள் பெற்றே தீருவார்கள்.''
(7:180)

மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

''வானங்களிலும் பூமியிலும் அவனுடைய தன்மை மிக உயர்ந்ததாகும். மேலும் அவன் வலிமைமிக்கவனாகவும் நுண்ணறிவாளானாகவும் இருக்கின்றான்.'' (30:27)

மேலும் கூறுகிறான்:

''உலகத்தில் எந்தப் பொருளும் அவனுக்கு ஒப்பானதாய் இல்லை. அவன் அனைத்தையும் செவியுறுபவனும் பார்ப்ப வனும் ஆவான்.'' (42:11)

அல்லாஹ்வின் பெயர்கள் - பண்புகள் விஷயத்தில் இருபிரிவினர் வழிதவறிப் போனார்கள்.

ஒரு பிரிவினர்: வெறுமையாக்குவோர்.

இவர்கள் அல்லாஹ்வின் பெயர்களை - குணஅம்சங் களை மறுப்பவர்கள்; முழுமையாக அல்லது சிலவற்றை. (அல்லாஹ்வுக்கு எந்தப் பண்பும் தன்மையும் இல்லை என்று அவனை வெறுமையாக்குகிறார்கள்)

அப்பெயர்களை — குணஅம்சங்களை அல்லாஹ்வுக்குக் கொடுத்தால் அல்லாஹ்வை ஒப்பிட வேண்டியதுவரும் என் கின்றனர். அதாவது, அல்லாஹ்வை அவனுடைய படைப் போடு ஒப்பிட வேண்டியது வரும் என்று கருதுகின்றனர்.

இந்தக் கருத்து தவறானதாகும்; இரண்டு காரணங்களின் அடிப்படையில்!

முதல் காரணம்: இதனால் அல்லாஹ்வின் வேதத்தில் முரண்பாடு உள்ளது என்பது போன்ற வீணான பிரச்னைகள் வரும். ஏனெனில், தனக்குப் பெயர்களும் குணஅம்சங்களும்

உள்ளன என்றும், எந்த ஒரு பொருளும் தன்னைப் போன்றில்லை என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். பெயர்களும் குணாம்சங்களும் அல்லாஹ்வுக்கு இருப்பதாகச் சொல்வது அவனை பிறவற்றோடு ஒப்பிடுவதாகும் என்றிருக்குமானால் —

அல்லாஹ்வின் வேதத்தில் முரண்பாடு உள்ளது என்றாகிவிடும். வசனங்களில் சிலவற்றைப் பொய்ப்படுத்துவது போலாகிவிடும்.

இரண்டாம் காரணம்: இரண்டு பொருள்கள் பெயரிலோ ஏதேனும் குணாம்சத்திலோ ஒத்திருப்பதனால் அவை இரண்டும் சரிநிகரானவையாக இருக்க வேண்டுமென்பதில்லை.

நீ இரு மனிதர்களைப் பார்க்கிறாய்; இருவருமே கேட்கும் — பார்க்கும் ஆற்றல் கொண்டவர்களாய் இருப்பதில் ஒத்திருக்கிறார்கள். அதனால் அவ்விருவரும் மனித ஆற்றல்களில் — கேட்பதில், பார்ப்பதில், பேசுவதில் சரிநிகரானவர்களாய் இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

பிற உயிரினங்களைப் பார்க்கிறாய்; அவற்றிற்குக் கைகள், கால்கள், கண்கள் இருக்கின்றன. இந்த உறுப்புகள் விஷயத்தில் அவை ஒத்திருப்பதனால் — அந்த உயிரினங்கள் அனைத்தும் சரிநிகரானவையாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை!

பெயர்கள் — குணாம்சங்களில் ஒத்திருக்கும் நிலையில் படைப்பினங்களுக்கிடையே வேறுபாடு தெளிவாக இருக்கிறதெனில், படைத்தவனுக்கும் படைக்கப்பட்டவற்றிற்கும் இடையே அவ்வேறுபாடு அதிகத் தெளிவானதும் மிகப் பெரியதுமாகும்!

இரண்டாவது பிரிவினர்: உவமைப்படுத்துவோர்

இவர்கள் அல்லாஹ்வின் பெயர்களையும் குணாம்சங்களையும் ஏற்றுக் கொள்கின்றனர்தாம்; ஆனால் அவனை அவனது படைப்பினத்தோடு ஒப்பிட்டு விடுகின்றனர்.

'இதுதான் மூல வசனங்களுடைய கருத்தின் தேட்டமா கும். ஏனெனில், அல்லாஹ் தன் அடியார்களிடம் அவர்கள் புரிந்துகொள்ளும் வார்த்தைகளில் உரையாடுகிறான்' என்ப தாக இவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்!

இந்தக் கருத்து தவறானதாகும்; இரண்டு காரணங்களி னால்!

1. அல்லாஹ் தன்னுடைய படைப்புக்கு ஒப்பாய் இருக் கின்றான் என்பது தவறானதாகும். அறிவும் இறைமார்க்கமும் அதைத் தவறு என்கின்றன!

மேலும் குர்ஆன் — ஹதீஸினுடைய வார்த்தைகளின் தேட்டம் ஒரு தவறான கருத்தைக் காட்டாது.

2. அல்லாஹ் தன் அடியார்களுடன் அவர்கள் புரிந்து கொள்ளும் வார்த்தைகளைக் கொண்டு உரையாடுவது அவ் வார்த்தைகளின் அசல் அர்த்தத்தைப் பொருத்தேயாகும். ஆயி னும் அந்த அர்த்தம் எந்த எதார்த்த நிலையில் அமைந்துள் ளதோ அந்த எதார்த்த நிலையைப் பற்றிய அறிவை அல்லாஹ் தனது உள்ளமை மற்றும் குணாம்சங்களைப் பொருத்த அளவில் — தனக்குரியதாக்கிக் கொண்டான்!

பாருங்கள்! 'அனைத்தையும் செவியுறுபவன்' என்று அல்லாஹ் தன்னைப் பற்றி கூறுகிறானெனில், செவியுறுதல் என்பது (சப்தங்களைக் கேட்பது எனும் அதன்) அசல் அர்த்தத்தைப் பொருத்து யாவரும் அறிந்த ஒன்றுதான். ஆனால், அல்லாஹ்வின் செவியேற்கும் ஆற்றல் பற்றிய எதார்த்த நிலையை நாம் எப்படி அறிய முடியும்?

ஏனெனில், செவியேற்பதன் எதார்த்த நிலை — படைப் பினங்களுக்கு மத்தியிலேகூட வேறுபடுகின்றபோது படைத் தவனுக்கும் படைப்பினங்களுக்குமிடையே அவ்வேறுபாடு மிகத் தெளிவானதும் பெரிய அளவிலானதும் ஆகும்!

அல்லாஹ் தன்னைப் பற்றி 'அவன் அர்ஷின் மீது அமர்ந்தான்' என்று அறிவித்துள்ளானெனில், அமர்தல் என்பது, அதன் அசல் அர்த்தத்தைப் பொருத்து அறியப்பட்டதாகும். ஆனாலும் அமர்தல் என்பதன் எதார்த்தநிலை — அர்ஷின்மீது அல்லாஹ் அமர்ந்தான் என்பதன் உண்மை நிலை நமது அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டதாகும்.

ஏனெனில், 'அமர்தலின்' எதார்த்த நிலை படைப்பினங்களின் விஷயத்திலேயே மாறுபடுகிறது. உறுதியான நாற்காலியின் மீது அமர்வது, விரண்டோடும் முரட்டுத்தனமான ஒட்டகத்தின் மீது அமர்வதைப் போலன்று!

இவ்வாறு அமர்தல் என்பது படைப்பினங்களின் விஷயத்திலேயே மாறுபடும்போது படைத்தவனுக்கும் படைப்பினங்களுக்குமிடையே அந்த வேறுபாடு மிகத் தெளிவானதும் பெரிய அளவிலானதுமாகும்.

நாம் மேலே கூறியதுபோன்று — அல்லாஹ்வின் மீது ஈமான் — நம்பிக்கை கொள்வது நம்பிக்கையாளர்களுக்கு மகத்தான பயன்களை அளிக்கிறது. அவற்றுள் சில:

1. அல்லாஹ் ஒருவன் எனும் ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளல்; அவனல்லாதவரிடம் ஆதரவும் அச்சமும் கொள்ளப்படாத வகையிலும் மேலும் அவனல்லாதவருக்கு வழிபாடு செலுத்தப்படாதவகையிலும் அதில் உறுதியாக இருத்தல்.

2. அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமும் அவன் விலக்கியவற்றைவிட்டுத் தவிர்ந்து கொள்வதன் மூலமும் இபாதத் — எனும் வழிபாட்டை உறுதிப்படுத்துவது!

## மலக்குமார்களை நம்புவது:

மலக்குகள் - இவர்கள் நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு படைப்பினம். அல்லாஹ்வை இபாதத் — வழிபாடு செய்து கொண்டிருப்பவர்கள். படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ கடவுள் தன்மைகளோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது. அல்லாஹ் அவர்களை ஒளியி னால் படைத்தான். தனது ஆணைக்கு முழுமையாகக் கீழ்ப் படியும் தன்மையையும் அதனை அமல்படுத்தும் ஆற்றலை யும் அவர்களுக்கு வழங்கியுள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்:

''எவர்கள் அவன் அருகில் இருக்கிறார்களோ அவர்கள் (அதாவது மலக்குகள்) கர்வம் கொண்டு அவனுக்கு இபாதத் செய்ய மறுப்பதில்லை; களைத்துப் போவதுமில்லை. இரவு பகல் எந்நேரமும் அவனைப் புகழ்ந்து துதிபாடிக் கொண்டே யிருக்கிறார்கள். சோர்வடைவதுமில்லை.'' (21:19-20)

அவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்கள் எத்தனை பேர் என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் கணக்கிட முடியாது!

மிஃராஜ் சம்பவம் பற்றி அனஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பில் வருகிறது. ''வானத்தில் உள்ள 'பைத்துல் மஃமூர்' நபி (ஸல்) அவர்களுக்குக் காண்பித்துக் கொடுக்கப் பட்டது. அதில் தினமும் எழுபது ஆயிரம் 'மலக்கு'கள் தொழுது கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதைவிட்டு வெளியேறினால் அங்கு திரும்ப ஒருபோதும் வரமாட்டார் கள். இதுவே அவர்களின் கடைசி வருகையாக இருக்கும்.''

மலக்குகள் மீது நம்பிக்கை கொள்வதில் நான்கு விஷயங் கள் உள்ளன.

1. அப்படி ஒரு படைப்பு உண்டு என நம்புவது.

2. அவர்களில் யார் யாருடைய பெயரை நாம் அறிந்துள்ளோமோ அந்த மலக்குகளை - அவர்களின் பெயரோடு நம்பவேண்டும்; ஜிப்ரீல் (அலை) போன்று! பெயர் அறியாத மலக்குகளைப் பொதுவாக நம்ப வேண்டும்.

3. அவர்களின் தன்மைகளில் இருந்து நமக்குத் தெரிந்தவற்றை நம்புவது; ஜிப்ரீல் (அலை) அவர்களின் தன்மையைப் போன்று!

ஜிப்ரீல் அவர்கள் எந்த எதார்த்த நிலையில் படைக்கப் பட்டுள்ளார்களோ அந்த எதார்த்த நிலையில் அவர்களைத் தாம் கண்டதாகவும் அவர்களுக்கு 600 சிறகுகள் இருந்தன என்றும் கீழ்வானத்தையே அவர்கள் அடைத்து நின்றார்கள் என்றும் — நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மலக்கு எனும் வானவர் சிலபோது மனித வடிவத்திற்கு மாறுவார்; அல்லாஹ்வின் கட்டளைப்படி! அல்லாஹ், ஜிப்ரீல் அவர்களை மர்யம் (அலை) அவர்களிடம் அனுப்பிய போது ஜிப்ரீல் மாறியது போன்று! அப்போது அவர் மர்யம் (அலை) அவர்களின் முன்னிலையில் முழு மனித வடிவத்தில் தோன்றினார்.

அவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்தபோதும் அப்படி நடந்தது. அவ்வேளை நபியவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். நபியவர்களிடம் ஜிப்ரீல் வந்தார் — வெள்ளை வெளேர் என்ற உடையுடனும் கருமையான தலைமுடியுடனும் மனித வடிவத்தில்! பயணத்தின் சோர்வோ — களைப்போ எதுவும் அவரிடத்தில் காணப்படவில்லை. நபித் தோழர்களில் எவரும் அவரை முன்பின் அறிந்திருக்கவுமில்லை. வந்தவர் நபி (ஸல்) அவர்களின் அருகில் அமர்ந்தார். தன்னுடைய முழங்கால்களை நபியவர்களின் முழங்கால்களுடன் சேர்த்து வைத்தார். தன் இரு கைகளைத் தன் தொடைகளின் மீது வைத்திருந்தார். இவ்

லாம், ஈமான், இஹ்ஸான், மறுமை மற்றும் அதன் அடையாளங்கள் ஆகியவை பற்றி நபி (ஸல்) அவர்களிடம் வினவினார். நபியவர்கள் அவற்றிற்கு பதிலளித்தார்கள். பிறகு ஜிப்ரீல் சென்றுவிட்டார்.

பிறகு நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''இவர்தான் ஜிப்ரீல்; உங்களுக்கு உங்களது மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக உங்களிடம் வந்தார்'' —ஸஹீஹ் முஸ்லிம்

இவ்வாறே — இப்றாஹீம் (அலை), லூத் (அலை) ஆகிய நபிமார்களிடம் அல்லாஹ் அனுப்பி வைத்த மலக்குமார்களும் மனித வடிவத்தில் வந்தார்கள்.

4. மலக்குகள், அல்லாஹ்வின் கட்டளைப்படி என்னென்ன அமல்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என நாம் அறிந்துள்ளோமோ அவற்றை நம்புவது. உதாரணமாக, அல்லாஹ்வைத் துதித்துக் கொண்டிருக்கிறார்கள். சடைவு, களைப்பு எதுவுமின்றி — இரவு பகல் எந்நேரமும் அவனை வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் சிலருக்கு பின்வரும் பிரத்தியேக அமல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

★ வஹியைச் சேர்ப்பிக்கும் பணியில் ஜிப்ரீல் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது போன்று! அல்லாஹ், ஜிப்ரீலை — நபிமார்கள், ரஸூல்மார்களிடம் வஹி கொண்டு செல்வதற்காக அனுப்பி வைக்கிறான்.

★ மழை பொழிவித்து தாவரங்களை வளர்க்கும் பணியில் 'மீகாயீல்' அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது போன்று.

★ மறுமை நாளில் படைப்புகளையெல்லாம் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பும் போது ஸூர் எனும் எக்காளம் ஊதும் பொறுப்பில் 'இஸ்ராஃபீல்' அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது போன்று

★ மனிதர்கள் மரணமாகும் போது உயிர்களைக் கைப் பற்றும் பணியில் 'மலகுல் மௌத்' எனும் வானவர் நியமிக் கப்பட்டிருப்பது போன்று!

★ நரகக் காவலராக மாலிக் நியமிக்கப்பட்டிருப்பது போன்று!

★ அன்னையரின் கருவறைகளில் உள்ள சிசுக்களைக் கவனிக்கும் பொறுப்பில் வேறு மலக்குகள் நியமிக்கப்பட்டி ருப்பது போன்று!

— கருவறையில் 'மனிதனுக்கு' நான்கு மாதங்கள் பூர்த் தியாகிவிட்டால் அல்லாஹ் அதனிடம் ஒரு மலக்கை அனுப் புகிறான். அம்மனிதனின் ரிஜ்க், ஆயுட்காலம், அவன் நற்பே றுடையவனா துர்ப்பேறுடையவனா என்பனவற்றை எழுதுவ தற்கு அவரைப் பணிக்கின்றான்.

★ மனிதர்களுடைய செயல்களை பாதுகாத்து வைக்க வும் ஒவ்வொருவருக்குமாக அவற்றை எழுதவும் சில மலக்கு மார்கள் நியமிக்கப்பட்டிருப்பது போன்று! — இரண்டு மலக்குகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள், மனிதனின் வலது புறம் ஒருவரும் இடதுபுறம் ஒருவரும்!

★ மரணமடைந்தவரிடம் கேள்வி கேட்பதற்காக சில மலக்குமார்கள் நியமிக்கப்பட்டிருப்பது போன்று!

— மனிதனை மண்ணறையில் வைத்ததும் அவனிடம் இரண்டு மலக்குகள் வருகிறார்கள். அவனுடைய இறைவன் யார்? அவனது தீன் என்ன? அவனுடைய நபி யார் என்பன பற்றி அவனிடம் வினவுகிறார்கள்!

மலக்குமார்களின் மீது ஈமான் கொள்வதிலும் மகத்தான சில பயன்கள் உண்டு. அவற்றுள் சில:

1. அல்லாஹ்வின் மாண்பு, ஆற்றல், அதிகாரம் ஆகிய வற்றை அறிவது — ஏனெனில் படைப்பினத்தின் மாண்பு படைத்தவனின் மாண்பில் அடங்கியது தானே!

*2. ஆதத்தின் மக்களுக்கு அல்லாஹ் முக்கியத்துவம் அளித்ததற்காக அவனுக்கு நன்றி செலுத்துவது — அவர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் செயல்களை எழுதுவதற்கும் அவர்களின் வேறுபல நலன்களுக்காகவும் இந்த மலக்குமார்களை அல்லாஹ் நியமித்துள்ளான் எனும் வகையில்!*

*3. மலக்குமார்களை நேசிப்பது — அல்லாஹ்வை அவர்கள் வணங்கி வழிபடுகிறார்கள் என்பதற்காக!*

மலக்குமார்கள் உடலமைப்புக் கொண்டவர்கள் என்பதை வழிதவறிப்போன சில கூட்டத்தார் மறுத்துள்ளார்கள். மேலும் 'படைப்பினங்களிடம் மறைந்துள்ள நல்ல சக்திகளுக்குத்தான்' மலக்குகள் என்று சொல்லப்படுகிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு சொல்வது — அல்லாஹ்வின் வேதத்தையும் அவனுடைய தூதரின் 'ஸுன்னத்தையும் முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவையும் பொய்ப்படுத்துவதாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

''வானங்களையும் பூமியையும் படைத்தவனும் மலக்குமார்களை - வானவர்களைத் தூதுகொண்டு செல்பவர்களாக நியமித்தவனும் ஆகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (அவ்வானவர்கள் எத்தகையோர் எனில்) அவர்களுக்கு இரண்டிரண்டு, மூன்று மூன்று, நான்கு நான்கு சிறகுகள் உள்ளன. அவன் தன்னுடைய படைப்புகளின் வடிவமைப்பில் தான் நாடுவதை அதிகப்படுத்துகிறான்.'' (35:1)

மேலும் கூறுகிறான்:

''(வீழ்த்தப்பட்ட) நிராகரிப்பாளர்களின் உயிர்களை வானவர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்ததை நீர் கண்டிருக்க வேண்டுமே! அந்த வானவர்கள் அவர்களின் முகங்களிலும் முதுகுகளிலும் அடித்துக் கொண்டிருந்தார்கள்.'' (8:50)

மேலும் கூறுகிறான்:

''அந்தோ! இந்த அக்கிரமக்காரர்கள் மரணவேதனைகளில் சிக்கியிருக்கும் போது நீர் பார்க்க வேண்டுமே! மேலும்

வானவர்கள் தங்கள் கரங்களை நீட்டியவாறு உங்களுடைய உயிர்களைக் கொடுங்கள்... (என்று கூறுவார்கள்)'' *(6:93)*

மேலும் கூறுகிறான்:

''இவ்வாறு (மலக்குகள் எனும்) வானவர்களின் உள்ளங்களில் இருந்து அச்சம் அகலும்போது 'உங்களுடைய இறைவன் என்ன பதிலுரைத்தான்' என்று கேட்பார்கள். அதற்கு 'சரியான பதில் தந்துள்ளான்; அவன் மிக உயர்ந்தவனாகவும் மாபெரியவனாகவும் இருக்கிறான்' என்று பதில் கூறுவார்கள்.'' *(34:23)*

ஓரிடத்தில் சுவர்க்க வாசிகள் குறித்து கூறுகிறான்:

''வானவர்கள் எல்லா வாசல்களில் இருந்தும் அவர்களை வரவேற்க வருவார்கள். மேலும் அவர்களிடம் கூறுவார்கள்: உங்கள் மீது சாந்தி நிலவட்டும். (உலகில்) நீங்கள் பொறுமையுடன் வாழ்ந்துவந்த காரணத்தால் இன்று இதற்குத் தகுதி பெற்றிருக்கிறீர்கள். மறுமையின் இல்லம் எத்துணை அழகானது.'' *(13:24)*

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
قَالَ: إِذَا أَحَبَّ اللهُ الْعَبْدَ نَادَى جِبْرِيْلَ أَنَّ اللهَ يُحِبُّ فُلَانًا
فَأَحِبَّهُ، فَيُحِبُّهُ جِبْرِيْلُ، فَيُنَادِي جِبْرِيْلُ أَهْلَ السَّمَاءِ أَنَّ
اللهَ يُحِبُّ فُلَانًا فَأَحِبُّوهُ، فَيُحِبُّهُ أَهْلُ السَّمَاءِ، ثُمَّ يُوضَعُ
لَهُ الْقَبُوْلُ فِي الْأَرْضِ.

''அல்லாஹ் ஓர் அடியான் மீது நேசம் கொண்டால் ஜிப்ரீலை அழைத்துக் கூறுகிறான்: நான் இன்ன அடியாரை நேசிக்கிறேன். நீரும் அவரை நேசிப்பீராக.'' அவ்வாறே ஜிப்ரீல் அவரை நேசிக்கிறார். பிறகு வானத்தில் உள்ளவரி டையே ஜிப்ரீல் அறிவிப்புச் செய்கிறார். ''திண்ணமாக அல்லாஹ் இன்ன அடியாரை நேசிக்கிறான். நீங்களும் அவரை நேசியுங்கள்.'' அவ்வாறே வானத்தில் உள்ளவர்க ளும் அவரை நேசிக்கிறார்கள். பிறகு அந்த பூமியில் அந்த அடியார் நல்லவர் என்று அங்கீகரிக்கப்படுகிறார்.'' — புகாரி

அபூஹுரைரா (ரலி) அவர்களின் பின்வரும் அறிவிப்பும் புகாரியில் இடம்பெற்றுள்ளது:

وَعَنْهُ أَيْضًا قَالَ : قَالَ النَّبِيُّ (ص) : إِذَا كَانَ يَوْمُ الْجُمُعَةِ كَانَ
عَلَى كُلِّ بَابٍ مِنْ أَبْوَابِ الْمَسْجِدِ الْمَلَائِكَةُ يَكْتُبُوْنَ الأَوَّلَ فَالأَوَّلَ
فَإِذَا جَلَسَ الإِمَامُ طَوَوْا الصُّحُفَ وَجَاؤُوا يَسْتَمِعُوْنَ الذِّكْرَ.

அண்ணல்நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''ஜும்ஆ நாள் வந்தால் மஸ்ஜிதின் ஒவ்வொரு வாசலிலும் மலக்குமார் கள் அமர்ந்து முதலில் வருபவர்களை வரிசைப்படி பதிவு செய்கிறார்கள். இமாம் (மின்பரில் ஏறி) அமர்ந்ததும் மலக்கு கள் தம் ஏடுகளைச் சுருட்டிவைத்து அறிவுரையைக் கேட்க வந்துவிடுகிறார்கள்.''

இத்தகைய மூலாதாரங்கள் — மலக்குமார்கள் என்போர் உடலமைப்பு உள்ளவர்களே தவிர — வழிபிறழ்ந்த கூட்டத் தார் சொல்வது போன்று — மானசீக சக்திகள் அல்லர் என்பதைத் தெளிவாக அறிவிக்கின்றன.

# வேதங்களின் மீது ஈமான் கொள்வது

அல்குத்பு (வேதங்கள்) எனும் சொல் கிதாப் என்பதன் பன்மை. கிதாப் என்றால் 'எழுதப்பட்டது' என்று பொருள்.

இங்கு வேதங்கள் என்பதன் கருத்து, அல்லாஹ் தன்னுடைய தூதர்களின் மீது இறக்கிவைத்த வேதங்கள் என்பதாகும். மனிதர்களுக்கு அருட்கொடையாகவும் நேர்வழி காட்டுவதற்காகவும் அவற்றை அல்லாஹ் இறக்கி வைத்தான்; அவற்றின் மூலம் இவ்வுலகிலும் மறுமையிலும் தங்களின் நற்பேற்றை அவர்கள் அடைந்திடும் பொருட்டு!

வேதங்களை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன.

1. உண்மையாக அல்லாஹ்விடமிருந்தே அவை இறக்கியருளப்பட்டுள்ளன என நம்புவது.

2. எந்தெந்த வேதங்களின் பெயர்களை நாம் அறிந்துள்ளோமோ அவற்றை அவற்றின் பெயரோடு ஈமான் கொள்வது.

உதாரணமாக, அல்குர்ஆன் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்டது.

தெளராத் வேதம் மூஸா (அலை) அவர்களுக்கு இறக்கப்பட்டது.

இன்ஜீல் ஈஸா (அலை) அவர்களுக்கு இறக்கப்பட்டது.

எந்த வேதங்களின் பெயர்களை நாம் அறிந்திருக்கவில்லையோ அந்த வேதங்களின் மீது பொதுப்படையாக நாம் ஈமான் கொள்ள வேண்டும்.

3. அந்த வேதங்கள் வழங்கும் செய்திகளிலிருந்து நம்பகமானவற்றை உண்மையென ஏற்றுக் கொள்வது — உதாரணமாக, குர்ஆனுடைய செய்திகளையும் முந்தைய வேதங்களிலிருந்து திரிக்கப்படாமல், மாற்றப்படாமல் உள்ள செய்திகளையும் ஏற்றுக் கொள்வது போன்று!

4. அவற்றில் வழக்கொழிக்கப்படாத, குர்ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களைக் கொண்டு அமல்செய்வது, அவற்றைத் திருப்தி கொள்வது, உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வது — அந்தச் சட்டங்களின் நுணுக்கத்தை நாம் அறிந்தாலும் அறியாவிட்டாலும் சரியே!

— முன்னர் அருளப்பட்ட வேதங்கள் அனைத்தும் அல்குர்ஆனின் வருகையால் காலாவதியாக்கப்பட்டு விட்டன.

அல்லாஹ் கூறுகிறான்:

''(நபியே) நாம் இவ்வேதத்தை உம்மளவில் சத்தியத்துடன் அனுப்பினோம். இது, முந்தைய வேதங்களிலிருந்து தன்முன்னே எஞ்சி நிற்கும் அறிவுரைகளை உண்மைப்படுத்தக் கூடியதாகவும் அவ்வேதங்களை முடிவுகட்டக் கூடியதாகவும் இருக்கிறது.'' (5:48)

இதன்படி — முந்தைய வேதங்களுடைய சட்டங்களின் அடிப்படையில் செயல்படுவது கூடாது; எது நம்பகமாக உள்ளதோ — எதை அல்குர்ஆனும் ஏற்றுக் கொண்டுள்ளதோ அந்தச் சட்டத்தின்படி செயல்படுவது கூடும்!

வேதங்களின் மீது ஈமான் — நம்பிக்கை கொள்வது மகத்தான பயன்களை அளிக்கிறது; அவற்றுள் சில:

1. அல்லாஹ் தன்னுடைய அடியார்களைப் பரிவோடு கவனித்திருப்பதை அறிவது - வழிகாட்டும் வேதத்தை ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் இறக்கியருளியிருப்பதன் மூலம்!

2. அல்லாஹ்வின் ஷரீஅத்தில் உள்ள நுணுக்கத்தை அறிவது — ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் அவரவர்களின் நிலைமைகளுக்கு ஏற்ற சட்டங்களையே அல்லாஹ் வகுத்தளித்துள்ளான் எனும் வகையில்!

அல்லாஹ் கூறுகிறான்:

''உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் மார்க்கத்தையும் வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்.'' (5:48)

3. அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துதல்.

## ரஸூல்மார்களின் மீது ஈமான் கொள்வது

ரஸூல் எனும்சொல் அர்ருஸுல் என்பதன் ஒருமையாகும். ரஸூல் என்றால் அனுப்பப்பட்டவர் என்றுபொருள். அதாவது, ஒரு விஷயத்தைப் பிறரிடம் கொண்டு சேர்ப்பதற்காக அனுப்பப்பட்டவர்.

இங்கு ரஸூல்மார்கள் என்பதன் கருத்து, இறை மார்க்கத்தை பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று எவர்களின் பால் வஹி அனுப்பப்பட்டுள்ளதோ அத்தகைய மனிதர்கள் என்பதாகும்.

அந்த ரஸூல்மார்களில் முதலானவர் நூஹ் (அலை) அவர்கள். இறுதியானவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

''(நபியே) நூஹுக்கும் அவருக்குப் பின்னால் வந்த நபிமார்களுக்கும் நாம் வஹி அறிவித்தது போன்று திண்ணமாக உமக்கும் நாம் வஹி அறிவித்துள்ளோம்'' (4:163)

அனஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள (மறுமை நாளின்) பரிந்துரை தொடர்பான நபிமொழியில் வருகிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதர்கள் ஆதம் (அலை) அவர்களிடம் வருவார்கள் — தங்களுக்காக அவர் பரிந்துரை செய்யும் பொருட்டு! அவரோ தம்மால் இயலாது என்று அவர்களிடம் கூறிவிடுவார். பிறகு சொல்வார்: நீங்கள் நூஹிடம் செல்லுங்கள்; அல்லாஹ் அனுப்பிவைத்த முதல் ரஸூல் அவர்தான்''

— புகாரி

முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

''முஹம்மத் உங்களுடைய ஆண்களில் எவருக்கும் தந்தையல்லர். ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதராகவும் இறுதி நபியாகவும் இருக்கிறார்''. (33:40)

எந்த உம்மத்தும் - சமூகமும் ரஸூல் அனுப்பப்படாமல் இல்லை — அல்லாஹ் அந்த ரஸூலுக்கு தனிப்பட்ட ஷரீஅத் சட்டத்தைக் கொடுத்து அவரை அவரது சமூகத்தாரிடம் அனுப்பி வைக்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَسُولًا أَنِ اعْبُدُوا اللَّهَ وَاجْتَنِبُوا الطَّاغُوتَ

''அல்லாஹ்வை வணங்குங்கள்; தாஃகூத்துக்கு அடிபணிவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று (கட்டளையிடும்படி) ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை நாம் அனுப்பினோம்.'' (16:36)

இன்னோர் இடத்தில் கூறுகிறான்:

''எச்சரிக்கை செய்பவர் எவரும் வருகை தராமல் எந்தச் சமுதாயமும் இருந்ததில்லை.'' (35:24)

வேறோர் இடத்தில் கூறுகிறான்:

''திண்ணமாக நாம் தௌராத்தை இறக்கினோம். அதில் வழிகாட்டுதலும் ஒளியும் இருந்தது. (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் அடிபணிந்த நபிமார்கள் அதைக் கொண்டே இந்த யூதர்களுக்குத் தீர்ப்பளித்து வந்தனர்.'' (5:44)

ரஸூல்மார்கள் இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள்; படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ வழிபடுவதற்கான தகுதிகளோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது.

அல்லாஹ் தன்னுடைய நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்: (அவர்களோ ரஸூல் மார்களின் தலைவராகவும் அல்லாஹ்விடத்தில் அவர்கள் அனைவரிலும் உன்னத அந்தஸ்துடையவர்களாகவும் இருக்கிறார்கள்)

قُل لَّآ أَمْلِكُ لِنَفْسِى نَفْعًا وَلَا ضَرًّا إِلَّا مَا شَآءَ ٱللَّهُ ۚ وَلَوْ كُنتُ
أَعْلَمُ ٱلْغَيْبَ لَٱسْتَكْثَرْتُ مِنَ ٱلْخَيْرِ وَمَا مَسَّنِىَ ٱلسُّوٓءُ ۚ
إِنْ أَنَا۠ إِلَّا نَذِيرٌ وَبَشِيرٌ لِّقَوْمٍ يُؤْمِنُونَ ﴿١٨٨﴾

''(நபியே அவர்களிடம்) நீர் கூறும்: நான் எனக்கு எவ்வித நன்மையையும் தீமையையும் அளிக்கும் ஆற்றல் பெற்றிலேன். அல்லாஹ் எதை நாடுகிறானோ அதுவே நிகழ்கிறது. மறைவானவற்றை நான் அறிபவனாக இருந்திருந்தால் எனக்கு நானே நிறைய ஆதாயங்களைப் பெற்றிருப்பேன். மேலும் எந்தத் தீங்கும் என்னை அணுகியிருக்காது. நம்பிக்கைக் கொள்ளும் மக்களுக்கு எச்சரிக்கை செய்பவனாகவும் நற்செய்தி சொல்பவனாகவுமே நான் இருக்கிறேன்''
(7:188)

வேறோர் இடத்தில் அல்லாஹ் கூறுகிறான்: (நபியே) கூறும்: ''உங்களுக்கு ஏதேனும் தீமையோ நன்மையோ செய்திடும் ஆற்றல் எனக்கில்லை.'' கூறும்: ''அல்லாஹ்வின் பிடியிலிருந்து எவராலும் என்னைக் காப்பாற்ற முடியாது. மேலும் அவனைத் தவிர வேறு எந்தப் புகலிடத்தையும் என்னால் பெறமுடியாது.'' (72:22)

நோய், மரணம், பசி, தாகம் போன்ற மனித இயல்பைச் சேர்ந்த தன்மைகள் ரஸூல் மார்களுக்கும் உண்டு.

இப்றாஹீம் (அலை) அவர்கள் தம் இறைவனை வர்ணித்துச் சொன்ன வார்த்தைகளை குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு எடுத்துக் கூறுகிறான்: ''மேலும் அவனே எனக்கு உண்ணவும் பருகவும் தருகிறான். மேலும் நான் நோயுற்றால் அவனே எனக்குக் குணமளிக்கிறான். அவனே என்னை மரணிக்கச் செய்பவன். பின்னர் எனக்கு உயிர் கொடுப்பான்.'' *(26:81)*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

''நான் உங்களைப் போன்ற மனிதன் தான். உங்களுக்கு மறதி ஏற்படுவது போன்று எனக்கும் மறதி ஏற்படுகிறது. எனவே நான் மறந்துவிட்டால் நீங்கள் எனக்கு நினைவூட்டுங்கள்.''

மேலும் ரஸூல்மார்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடும் போது அவர்கள் எனக்கு அடிமைப்பட்டிருக்கும் தன்மையைப் பெற்றுள்ளார்கள் என்றும் அது அவர்களின் அந்தஸ்துகளிலேயே உன்னதமானது என்றும் சுட்டிக்காட்டுகிறான். அவர்களைப் புகழ்ந்துரைக்கும் தொடரில் இவ்வாறு சொல்கிறான்.

நூஹ் நபி (அலை) அவர்களைக் குறித்துக் கூறுகிறான்:

إِنَّهُ كَانَ عَبْدًا شَكُورًا ۝

''திண்ணமாக நூஹ் நன்றியுள்ள ஓர் அடியாராகத் திகழ்ந்தார்.'' *(17:3)*

வேறோர் இடத்தில் முஹம்மத் (ஸல்) அவர்களைக் குறித்து கூறுகிறான்:

*''சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக் கூடிய இந்த வேதத்தை தன் அடியார்மீது இறக்கி வைத்த (இறை)வன் மேன்மை நிறைந்தவனாக இருக்கிறான்.'' (25:1)*

மேலும் இப்றாஹீம் நபி, இஸ்ஹாக் நபி, யஃகூப் நபி (அலைஹிம்) ஆகியோரைக் குறித்து இவ்வாறு கூறுகிறான்:

''மேலும் நம்முடைய அடியார்களான இப்றாஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரை நினைவுபடுத்துவீராக. அவர்கள் மிகுந்த செயலாற்றலும் நுண்ணோக்கும் உடைய வர்களாவர். மறுமையை நினைவு கூர்தல் எனும் ஒரு தூய பண்பு அவர்களிடம் இருந்தமையால் நாம் அவர்களைத் தேர்ந்தெடுத்திருந்தோம். நிச்சயமாக அவர்கள் நம்மிடத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட சான்றோர்கள் ஆவர்.'' *(38:46)*

இன்னோர் இடத்தில் ஈஸா நபி (அலை) அவர்களைப் பற்றி கூறுகிறான்:

''மர்யத்தின் குமாரர் ஓர் அடியாரே தவிர வேறல்லர். அவர் மீது நாம் அருள்புரிந்திருந்தோம். பனூ இஸ்ராயீல் சந்ததியினருக்கு நமது ஆற்றலின் முன்னுதாரணமாக நாம் அவரை ஆக்கியிருந்தோம்.'' *(43:59)*

## ரஸூல்மார்களின் மீது நம்பிக்கை கொள்வதில் நான்கு விஷயங்கள் உள்ளன:

1. அவர்களின் தூதுத்துவப் பொறுப்பு உண்மையில் அல்லாஹ்விடமிருந்து வழங்கப்பட்டதாகும் என நம்புவது.

— எனவே ரஸூல்மார்களில் ஒருவருடைய தூதுத்து வத்தை நிராகரித்தவன் அனைத்து தூதர்களையும் நிராகரித்தவ னாவான். நூஹ் நபியை நிராகரித்தவர்களைப் பற்றி அல் லாஹ் இவ்வாறு கூறுகிறான்: ''நூஹுடைய சமூகத்தினர் இறைத்தூதர்களைப் பொய்ப்படுத்தினார்கள்.''

அந்தச் சமூகத்தினர் எல்லா ரஸூல்மார்களையும் பொய்ப்படுத்தியதாகக் கூறுகிறான்; ஆனால் அவர்கள் நூஹ் நபியைப் பொய்ப்படுத்திய போது நூஹைத் தவிர வேறு தூதர் எவரும் இல்லை.

இதன்படி எந்த கிறிஸ்தவர்கள் முஹம்மத் நபி (ஸல்) அவர்களைப் பொய்ப்படுத்துகிறார்களோ — அவர்களைப் பின்பற்றாமல் இருக்கிறார்களோ அந்த கிறிஸ்தவர்கள் ஈஸா நபி அவர்களையும் பொய்ப்படுத்தக் கூடியவர்களாவர்; அவர்களைப் பின்பற்றாதவர்களுமாவர்!

அதிலும் குறிப்பாக, ஈஸா நபியவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகையைக் குறித்து கிறிஸ்தவர்களுக்கு முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள். அவ்வாறு முன்னறிவிப்புச் செய்திருப்பதன் பொருள் — அவர் அவர்களின் பால் அனுப்பப்பட்ட தூதர்; அந்தத் தூதரின் மூலம் அவர்களை வழிகேட்டிலிருந்து வெளியேற்றி அவர்களுக்கு நேர்வழி காட்டிட அல்லாஹ் விரும்புகின்றான் — என்பதைத் தவிர வேறில்லை!

2. அவர்களில் யாருடைய பெயரை நாம் அறிந்துள்ளோமோ அவர்களின் மீது அவர்களின் பெயருடன் ஈமான் கொள்வது; முஹம்மத், இப்றாஹீம், மூஸா, ஈஸா, நூஹ் (அலைஹிம்) ஆகிய ரஸூல்மார்களின் மீது ஈமான் கொள்வது போன்று!

இந்த ஐந்து பேரும் உலுல்அஸ்ம் - மனஉறுதி பெற்ற ரஸூல்மார்களாவர். குர்ஆனில் இரண்டு இடங்களில் அல்லாஹ் இவர்களைப் பற்றி கூறியுள்ளான்.

"மேலும் (நபியே) எல்லா நபிமார்களிடமிருந்தும் என்ன வாக்குறுதியை நாம் வாங்கினோமோ அதனை நீர் நினைவுகூரும். உம்மிடமிருந்தும் நூஹ், இப்றாஹீம், மூஸா, மர்யத்தின் குமாரர் ஈஸா ஆகியோரிடமிருந்தும் (நாம் வாக்குறுதி வாங்கினோம்)" (33:7)

இன்னோர் இடத்தில் —

''எந்த தீனை — இறைமார்க்கத்தை நூஹுக்கு அவன் வகுத்தளித்திருந்தானோ மேலும் (முஹம்மதே) எந்த தீனை உமக்கு நாம் வஹியின் மூலம் அறிவித்திருக்கிறோமோ மேலும் எந்த வழிகாட்டலை இப்றாஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்கு நாம் வழங்கியிருக்கிறோமோ அதே தீனை - இறை மார்க்கத்தைத்தான் உங்களுக்காக அவன் நிர்ணயித் துள்ளான். (அதாவது) இந்த தீனை நிலைநாட்டுங்கள்; இதில் பிரிந்து போய்விடாதீர்கள் (எனும் அறிவுறுத்தலுடன்!) *(42:13)*

அந்த ரஸூல்மார்களில் யார் யாரின் பெயர்கள் நமக்குத் தெரியாதோ அவர்களின் மீது பொதுப்படையாக நாம் ஈமான் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்.

''மேலும் (நபியே), நாம் உமக்கு முன்பு இறைத்தூதர்கள் பலரை அனுப்பியிருக்கிறோம். அவர்களில் சிலரைக் குறித்து நாம் உமக்கு எடுத்துரைத்திருக்கின்றோம். வேறு சிலரைப் பற்றி நாம் உமக்கு எடுத்துரைக்கவில்லை.'' *(40:78)*

3. அவர்களைப் பற்றிய செய்திகளில் நம்பகமானவற்றை உண்மைப்படுத்துவது.

4. அவர்களில் எந்தத் தூதர் இப்போது நம்மிடம் அனுப்பப்பட்டுள்ளாரோ அவருடைய ஷரீஅத் சட்டங்களின்படி செயல்படுவது.

— அவர்தாம் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள். இவர்கள் எல்லா மனிதர்களுக்காகவும் அனுப்பப்பட்ட தூதர் ஆவார்கள்.

*அல்லாஹ் கூறுகிறான்:*

*''இல்லை! (முஹம்மதே) உம் இறைவன் மீது சத்திய மாக! அவர்கள் தங்களுக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்றுக் கொண்டு பின்னர் நீர் அளிக்கும் தீர்ப்புக் குறித்து தம் உள்ளங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாமல் முற்றிலும் அதற்கு அடிபணியாத வரையில் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக ஆகமாட்டார்கள்.''*

*(4:65)*

**ரஸூல்மார்களின் மீது ஈமான் கொள்வதன் மகத்தான பயன்களுள் சில:-**

*1. அடியார்களின் மீது அல்லாஹ் பொழிந்த கருணையை — அவர்களின் பால் கொண்ட பரிவை அறிந்து கொள்வது.*

*— எவ்வாறெனில், அவன்தான் தன்னுடைய அடியார்களின் பால் தூதர்களை அனுப்பிவைத்தான்; அத்தூதர்களின் மூலம் அவர்களுக்கு நேர்வழி காட்டவும் அவர்கள் எவ்வாறு அல்லாஹ்வை வணங்கி வழிபட வேண்டும் என கற்றுக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தான். இவ்வாறு அடியார்களுக்கு அருள்புரிந்துள்ளான்! மனிதனின் பகுத்தறிவைக் கொண்டு மட்டும் இவற்றைப் புரிந்திட முடியாது.*

*2. அல்லாஹ்வின் இம்மாபெரும் அருட்கொடைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்துவது.*

*3. ரஸூல்மார்களின் மீது அன்பு செலுத்துவது, அவர்களுக்கு கண்ணியம் அளிப்பது, அவர்களின் தகுதிக்குப் பொருத்தமான முறையில் அவர்களைப் புகழ்வது.*

*— ஏனெனில், அவர்கள் அல்லாஹ்வின் தூதர்களாவர். அவனை வணங்கி வழிபட கற்றுத் தந்தவர்கள், அவனது தூதுச் செய்தியை சேர்ப்பித்தவர்கள், அவனுடைய அடியார்களுக்கு நற்போதனை புரிந்தவர்கள்!*

ஆனால் பிடிவாதக்காரர்கள் தங்களின்பால் அனுப்பப் பட்ட தூதர்களைப் பொய்ப்படுத்தினார்கள். மனிதர்கள் அல் லாஹ்வின் தூதர்களாய் வரமுடியாது என்று கருதினார்கள். இந்தக் கருத்து தவறானது; உண்மைக்குப் புறம்பானது என்று அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகிறான், பின்வரும் வசனத் தில்:-

وَمَا مَنَعَ النَّاسَ اَنْ يُّؤْمِنُوْٓا اِذْ جَآءَهُمُ الْهُدٰٓى اِلَّآ اَنْ قَالُوْٓا اَبَعَثَ
اللّٰهُ بَشَرًا رَّسُوْلًا ۝ قُلْ لَّوْ كَانَ فِى الْاَرْضِ مَلٰٓئِكَةٌ
يَّمْشُوْنَ مُطْمَئِنِّيْنَ لَنَزَّلْنَا عَلَيْهِمْ مِّنَ السَّمَآءِ مَلَكًا
رَّسُوْلًا ۝

''மக்களிடம் நேர்வழி வந்தபோதெல்லாம் அதன்மீது நம்பிக்கை கொள்ளவிடாமல் அவர்களைத் தடுத்தது, ''அல் லாஹ் ஒரு மனிதரையா தூதராக அனுப்பியிருக்கிறான்?'' என்று அவர்கள் கேட்டதுதான். அவர்களிடம் கூறும்: ''பூமி யில் வானவர்களே நிம்மதியுடன் நடந்து திரிந்து கொண்டி ருப்பார்களேயானால் நாம் அவர்களுக்காக வானத்திலிருந்து ஒரு வானவரையே தூதராக அனுப்பியிருப்போம்.''

*(17:94-95)*

மேற்சொன்ன அவர்களின் கருத்து தவறானது என்பதை அல்லாஹ் இங்கு தெளிவுபடுத்துகிறான்: பூமியில் வசிப்பவர் களிடம்தான் இறைத்தூதர் அனுப்பப்படுகிறார். பூமியில் வசிப்போர் மனிதர்களாக இருக்கிறார்கள். ஆகையால் இறைத்தூதர் மனிதராகத்தான் இருக்க வேண்டும்.

இப்பூமியில் வசிப்போர் மலக்குமார்களாக இருந்திருந் தால் வானத்தில் இருந்து ஒரு மலக்கை தூதராக அல்லாஹ் அனுப்பி வைத்திருப்பான் — அவர்களைப் போன்றுதானே அவர் இருக்க வேண்டும் என்பதற்காக!

இவ்வாறு ரஸூல்மார்களைப் பொய்ப்படுத்தியவர்கள் கூறியதை அல்லாஹ் பின்வருமாறு எடுத்துரைக்கிறான்:

''அதற்கு அந்த மக்கள் கூறினார்கள்: ''நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்களே தவிர வேறொன்றுமில்லை. எங்கள் மூதாதையர் எவற்றை வணங்கி வந்தார்களோ அவற்றை நாங்கள் வணங்குவதிலிருந்து எங்களைத் தடுக்க வேண்டுமென்றுதானே நீங்கள் விரும்புகிறீர்கள். அப்படியானால் ஒரு தெளிவான சான்றினைக் கொண்டு வாருங்கள்''. அதற்கு அவர்களுடைய தூதர்கள் கூறினார்கள்: ''உண்மையில் நாங்கள் உங்களைப் போன்ற மனிதர்கள்தாம். ஆனால் அல்லாஹ் தன்னுடைய அடியார்களில் தான் நாடுகின்றவர்களுக்குப் பேரருள் வழங்குகிறான். மேலும் நாங்கள் உங்களிடம் சான்றினைக் கொண்டு வருவது எங்களது அதிகாரத்தில் இல்லை - அல்லாஹ்வின் கட்டளை கொண்டே தவிர!''

*(14:10-11)*

## இறுதிநாளின் மீது நம்பிக்கை கொள்வது

இறுதிநாள் — மனிதர்கள் அனைவரும் உயிர்ப்பித்து எழுப்பப்படுகிற மறுமை நாளாகும் — கேள்வி கணக்கு கேட்டு நற்கூலி, தண்டனை வழங்கும் நாளாகும்.

இந்நாளை இறுதிநாள் என்று கூறுவதற்குக் காரணம், இந்நாளிற்குப் பிறகு வேறொரு நாள் இருக்காது. முடிவாக சுவன வாசிகள் தத்தம் இடங்களில் மகிழ்ச்சியுடன் தங்குவார்கள். நரகவாசிகள் கடும் வேதனையில் ஆழ்ந்து கிடப்பார்கள்.

இறுதிநாளின் மீது நம்பிக்கை கொள்வதில் மூன்று விஷயங்கள் உள்ளன.

1. உயிர்ப்பித்து எழுப்புவதை நம்புவது.

— ஸூர் எனும் எக்காளம் இரண்டாவது தடவை ஊதப்படும்போது மரணித்தோர் உயிர்ப்பித்தெழுப்பப்படுவார்கள். பிறகு அவர்கள் அனைவரும் இறைவன் முன்னிலையில் — பாதணிகளின்றி வெறுங்காலுடனும், ஆடைகளின்றி

நிர்வாணமாகவும், விருத்த சேதனம் செய்யப்படாமலும் நிற்பார்கள்.

*அல்லாஹ் கூறுகிறான்:*

يَوْمَ نَطْوِى السَّمَآءَ كَطَيِّ السِّجِلِّ لِلْكُتُبِ كَمَا بَدَأْنَآ أَوَّلَ خَلْقٍ نُّعِيدُهُۥ وَعْدًا عَلَيْنَآ إِنَّا كُنَّا فَٰعِلِينَ ۝

*''நாம் முதலில் எவ்வாறு படைக்கத் தொடங்கினோமோ அவ்வாறே நாம் மீண்டும் படைப்போம். இது நம்முடைய பொறுப்பிலுள்ள ஒரு வாக்குறுதியாகும். நிச்சயமாக அதனை நாம் நிறைவேற்றியே தீருவோம்.'' (21:104)*

*மறுமை நாளில் மனிதர்கள் உயிர் கொடுத்தெழுப்பப்படுவார்கள் என்பது குர்ஆனும் நபிமொழியும் அறிவித்துள்ள உறுதியான உண்மையாகும். முஸ்லிம்களின் ஒருமித்த முடிவும் இதுவே!*

*அல்லாஹ் கூறுகிறான்:*

*''பின்னர் நிச்சயமாக நீங்கள் இதற்குப் பிறகு மரணிக்கக் கூடியவர்கள்தாம். பிறகு திண்ணமாக நீங்கள் மறுமை நாளில் எழுப்பப்படுவீர்கள்.'' (23:16)*

*நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:*

*''மறுமை நாளில் மனிதர்கள் அனைவரும் பாதணிகளின்றியும் விருத்தசேதனம் செய்யப்படாமலும் எழுப்பப்படுவார்கள்.''*
*— புகாரி, முஸ்லிம்*

இது ஓர் ஆதாரப்பூர்வமான உண்மையாகுமென முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டிருக்கிறார்கள். விவேகத்தின் தேட்டமும் இதுதான்! எவ்வாறெனில், [illegible] படைப்பிற்கு மறுஉலகம் [illegible] வேண்டும்; [illegible]

தூதர்களின் வாயிலாக என்னென்ன கடமைகளை அவர்களின் மீது சுமத்தினானோ அவற்றின் பேரில் அன்று அவர்களுக்கு நற்கூலி அல்லது தண்டனை கொடுக்க வேண்டும் என்றே பகுத்தறிவு உணர்த்துகிறது!

அல்லாஹ் கூறுகிறான்:

''நாம் உங்களை வீணாகவே படைத்துள்ளோம் என்றும் நம்மிடம் நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படவே மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தீர்களா என்ன?'' *(23:115)*

மற்றோர் இடத்தில் தன் நபியிடம் கூறுகிறான்: ''(நபியே), இந்தக் குர்ஆன்படி வாழ்வதை - வாழவைப்பதை உம்மீது கடமையாக்கியவன் உம்மை மறுமையின் பக்கம் கொண்டு செல்லக்கூடியவனாக இருக்கிறான்.'' *(28:85)*

2. விசாரணையையும் கூலி கொடுப்பதையும் நம்புவது.

— தனது செயல்குறித்து மனிதன் விசாரிக்கப்படுவான். அதன்பேரில் கூலியோ — தண்டனையோ அவனுக்கு வழங்கப்படும். குர்ஆனும் ஹதீஸும் இதனை அறிவிக்கின்றன. முஸ்லிம்களின் ஒருமித்த கருத்தும் இதுவே ஆகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

''திண்ணமாக இவர்கள் நம் பக்கமே திரும்பி வர வேண்டியுள்ளது. பிறகு இவர்களிடம் கணக்கு வாங்கும் பொறுப்பு நம்மீதே உள்ளது.'' *(88:25-26)*

வேறோர் இடத்தில் கூறுகிறான்.

مَنْ جَآءَ بِالْحَسَنَةِ فَلَهٗ عَشْرُ اَمْثَالِهَا ۚ وَمَنْ جَآءَ بِالسَّيِّئَةِ
فَلَا يُجْزٰٓى اِلَّا مِثْلَهَا وَهُمْ لَا يُظْلَمُوْنَ ۝

''எவர் (இறைவனின் திருமுன்) நன்மையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அதைப்போல் பத்து மடங்கு நற்கூலி

உண்டு. எவர் தீமையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அவர் செய்த தீமை அளவுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும். மேலும் அவர்கள் யாருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது.'' (6:160)

இன்னோர் இடத்தில்,

''நாம் மறுமைநாளில் துல்லியமாக எடைபோடும் தராசுகளை நிறுவுவோம். பின் எவருக்கும் இம்மியளவும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. மனிதன் செய்யும் கடுகளவு செயலாயினும் அதனை நாம் (மறுமையில்) அவர்முன் கொண்டுவருவோம். கணக்கு வாங்குவதற்கு நாமே போதுமானவர்களாக இருக்கிறோம்.'' (21:47)

இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: ''அண்ணல்நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (மறுமையில்) ஓர் இறை நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வரப்படுவார். அல்லாஹ் அவர்மீது தனது கருணையைப் பொழிவான். பிறகு கேட்பான்: நீ இன்னின்ன பாவத்தை அறிவாயா? அதற்கு அவர் ''ஆம், என் அதிபதியே'' என்று பதிலளிப்பார். — அவ்வாறு அவர் தன்னுடைய பாவங்களை ஏற்றுக் கொண்டு (எனக்கு அழிவுதான்) எனக் கருதும் போது அல்லாஹ் கூறுவான்:

''இந்தப் பாவங்களை உலகத்திலேயே உனக்காக நான் மறைத்துவிட்டிருந்தேன். இன்றைய தினம் உனக்கு நான் மன்னிப்பு அளிக்கிறேன்.'' பிறகு அவருடைய நன்மைகளின் பதிவேடு அவரிடம் அளிக்கப்படும்.

ஆனால் நிராகரிப்பாளர்கள் — நயவஞ்சகர்களின் நிலைமை என்னவெனில், படைப்பினங்களின் முன்னிலையில் அல்லாஹ் அவர்களை அழைத்துக் கூறுவான்: ''இவர்கள் தாம் இறைவனின் பேரில் பொய்யுரைத்தவர்கள். அறிந்து கொள்ளுங்கள்! அநியாயக்காரர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டுமாக.'' — புகாரி, முஸ்லிம்

أَنَّ مَنْ هَمَّ بِحَسَنَةٍ فَعَمِلَهَا كَتَبَهَا اللهُ عِنْدَهُ عَشْرَ حَسَنَاتٍ
إِلَى سَبْعِمِائَةِ ضِعْفٍ إِلَى أَضْعَافٍ كَثِيرَةٍ ، وَإِنْ هَمَّ بِسَيِّئَةٍ فَعَمِلَهَا
كَتَبَهَا اللهُ سَيِّئَةً وَاحِدَةً .

மேலும் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்: ''ஒருவர் ஒரு நன்மையான காரியத்தை நாடி அதனை செயல்படுத்தி னால் அல்லாஹ் அதனைப் பத்து நன்மைகளாக தன்னிடத் தில் பதிவு செய்து கொள்கிறான். எழுநூறு மடங்குகளாக - ஏன் இன்னும் ஏராளமான மடங்குகளாக கூடுதலாக்குகி றான்! மேலும் ஒருவர் ஒரு தீய காரியத்தை நாடி அதனை செயல்படுத்தினால் அல்லாஹ் அதனை ஒரு தீமையாகத்தான் பதிவு செய்து கொள்கிறான்.''

(மறுமை நாளில்) விசாரணை உண்டு. கூலியோ, தண்ட னையோ உண்டு என முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டுள்ளார்கள். அதுதவிர அறிவு நுட்பத்தின் தேட்டமும் அதுவேயாகும்!

ஏனெனில், அல்லாஹ் வேதங்களை இறக்கியுள்ளான். தூதர்களை அனுப்பினான். அந்தத் தூதர்கள் கொண்டுவந்த மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவற்றுள் கடமையான காரியங்களை செய்தேயாக வேண்டும் என்றும் அடியார்களின் மீது கடமையாக்கினான். அந்த மார்க்கத்தை எதிர்ப்பவர்களுடன் ஜிஹாத் எனும் புனிதப்போர் செய்வதை யும் கடமையாக்கினான். (அது குர்ஆன் — ஹதீஸின் நெறிமு றைப்படி ஆனதாகும்) விசாரணையோ, நற்கூலி - தண்ட னையோ எதுவும் இல்லையென்றால் மேற்சொன்ன அனைத் தும் வீணாகிவிடும். நுண்ணறிவாளனாகிய இறைவன்

வீணான காரியம் செய்வதில் இருந்து தூய்மையானவனா வான்!

பின்வரும் வசனத்தில் இதனை அல்லாஹ் சுட்டிக்காட்டு கிறான்.

''எனவே எந்த மக்களிடம் தூதர்கள் அனுப்பப்பட்டார் களோ அந்த மக்களிடமும் திண்ணமாக நாம் விசாரணை நடத்துவோம். அத்தூதர்களிடமும் நிச்சயம் விசாரிப்போம். (தூதுத்துவக் கடமையை அவர்கள் எதுவரை நிறைவேற்றி னார்கள்; மக்களிடம் இருந்து என்ன பதில் கிடைத்தது என்று!) பிறகு (நடந்த நிகழ்ச்சிகள்) அனைத்தையும் நாம் முழு அறிவுடன் அம்மக்களுக்கு எடுத்துச் சொல்வோம்''
*(7:7-8)*

## சுவனம் நரகத்தை நம்புவது

இவ்விரண்டு இடங்களும் படைப்பினங்கள் சென்ற டைய வேண்டிய நிரந்தரமான இடங்களாகும்.

சுவனம் என்பது அருட்பேறுகள் நிறைந்த ஓர் உலகம் ஆகும். பயபக்தியாளர்களான நம்பிக்கையாளர்களுக்காக அல்லாஹ் அதனை தயார் செய்து வைத்திருக்கிறான். என் னென்ன விஷயங்களின் மீது ஈமான் — நம்பிக்கை கொள்ள வேண்டுமென அல்லாஹ் அவர்களின் மீது கடமையாக்கி னானோ அவற்றின் மீது அவர்கள் ஈமான் கொண்டார்கள். அல்லாஹ் — ரஸூலுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தார்கள். அல்லாஹ்வுக்கு வாய்மையானவர்களாகவும் அவனுடைய தூதரைப் பின்பற்றியவர்களாகவும் திகழ்ந்தார்கள்! எல்லா வகையான அருட்பேறுகளும் — எந்தக் கண்ணும் கண்டிருக் காத, எந்தக் காதும் கேட்டிருக்காத, எந்த மனிதரின் உள்ளத்தி லும் உதித்திருக்காத இன்பங்கள் அனைத்தும் அந்தச் சுவனத் தில் உள்ளன.

*அல்லாஹ் கூறுகிறான்:*

*''எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர்கள்தாம் படைப்பினங்களில் மிகவும் சிறந்தவர்கள். அவர்களின் கூலி அவர்களுடைய இறைவனிடம் — நிலையாகத் தங்கும் சுவனங்களாகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கி வாழ்வார்கள். அல்லாஹ் அவர்களைக் குறித்து திருப்தியுற்றான். அவர்களும் அவனைக் குறித்து திருப்தியுற்றார்கள். இவை அனைத்தும் தம் இறைவனை அஞ்சக் கூடியவர்களுக்குரியவையாகும்.'' (98:7-8)*

மேலும் கூறுகிறான்:

*''அவர்களுடைய செயல்களின் கூலியாக எத்தகைய இன்பங்கள் அவர்களுக்காக மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்பதை யாரும் அறியமாட்டார்கள்.'' (32:17)*

*நரகம் என்பது வேதனைகள் நிறைந்ததோர் உலகமாகும். அநீதியாளர்களான இறைநிராகரிப்பாளர்களுக்காக அல்லாஹ் அதனை தயார் செய்து வைத்துள்ளான்; அவர்கள் அல்லாஹ்வை நிராகரித்தார்கள். அவனுடைய தூதர்களுக்கு மாறு செய்தார்கள்! யாருடைய உள்ளத்திலும் தோன்றியிராத, விதவிதமான வேதனைகளும் தண்டனைகளும் நரகத்தில் உள்ளன!*

*அல்லாஹ் கூறுகிறான்:*

وَاتَّقُوا النَّارَ الَّتِيٓ أُعِدَّتْ لِلْكٰفِرِيْنَ ۚ

''இறை நிராகரிப்பாளர்களுக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ள நரக நெருப்புக்கு அஞ்சுங்கள்.'' *(3:131)*

மேலும் கூறுகிறான்:

*"(நிராகரிக்கக் கூடிய) கொடுமையாளர்களுக்குத் திண்ணமாக நாம் ஒரு நெருப்பைத் தயார் செய்து வைத்துள்ளோம். அதன் சுவாலைகள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். அங்கு அவர்கள் தண்ணீர் கேட்பார்களாயின் உருக்கிய உலோகம் போன்ற நீர் அவர்களுக்குக் கொடுக்கப்படும். அது அவர்களின் முகங்களைக் கரித்துவிடும். அது மிகவும் கேடுகெட்ட பானம் ஆகும். மேலும் அவர்களின் ஒய்விடம் தீயதாகும்."* *(18:29)*

இன்னும் அல்லாஹ் கூறுகிறான்:

*(எவ்வாறாயினும்) நிராகரிப்பாளர்களை அல்லாஹ் திண்ணமாக சபித்துவிட்டான். அவர்களுக்காக கொழுந்து விட்டு எரியும் நெருப்பை தயார்செய்தும் வைத்திருக்கிறான்; அதில் அவர்கள் என்றென்றும் வீழ்ந்து கிடப்பார்கள். எந்த ஒரு ஆதரவாளரையும் உதவியாளரையும் அவர்கள் பெறமாட்டார்கள். எந்நாளில் அவர்களுடைய முகங்கள் நெருப்பில் புரட்டி எடுக்கப்படுமோ அந்நாளில் அவர்கள் கூறுவார்கள்: "அந்தோ! நாங்கள் அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கீழ்ப்படிந்து வாழ்ந்தோமில்லையே."* *(33:63-67)*

## மரணத்திற்குப் பின் உள்ள அனைத்தின் மீதும் ஈமான் கொள்வது மறுமைநாளை நம்புவதில் அடங்கும்

### 1. மண்ணறை — கப்றின் குழப்பம்:

*மரணம் அடைந்தவரிடம் — அவரை அடக்கம் செய்த பிறகு — அவருடைய இறைவன் யார்? — மார்க்கம் எது? அவருடைய நபி யார் என்றெல்லாம் கேள்வி கேட்பதாகும் இது.*

*(உலகில்) இறைநம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர்களை (கப்றில்) உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் திடப்படுத்துவான். அப்படிப்பட்டவர் சொல்வார்: என்*

இறைவன் அல்லாஹ்; எனது தீன் இஸ்லாம்; என்னுடைய நபி, முஹம்மத் (ஸல்) அவர்கள் என்று!

ஆனால், அநீதியாளர்களான நிராகரிப்பாளர்களை அல்லாஹ் வழிசறுகச் செய்வான். நிராகரிப்பாளன் உளறுவான்: ஆஹ்! ஆஹ்! நான் அறியேனே என்று!

நயவஞ்சகன் (அல்லது சந்தேகத்தில் உழன்று கொண்டிருந்தவன்) சொல்வான்: மக்கள் எதையோ சொல்லக் கேட்டிருக்கிறேன்; நானும் அதையே சொன்னேன்.''

**2. மண்ணறையின் துன்பமும் இன்பமும்:**

கப்றின் துன்பமோ நயவஞ்சகர்களாகவும் நிராகரிப்பாளர்களாகவும் வாழ்ந்த அநீதியாளர்களுக்கு ஏற்படும்.

அல்லாஹ் கூறுகிறான்:

''இந்த அக்கிரமக்காரர்கள் மரண வேதனையில் சிக்கியிருக்கும் போது நீர் பார்க்க வேண்டுமே! மேலும் வானவர்கள் தங்கள் கரங்களை நீட்டியவாறு உங்களுடைய உயிர்களைக் கொடுங்கள். அல்லாஹ்வின் பேரில் உண்மைக்குப் புறம்பானவற்றை நீங்கள் கூறிக் கொண்டிருந்ததாலும் அவனுடைய வசனங்களை ஏற்காமல் நீங்கள் கர்வம் கொண்டிருந்ததாலும் இன்று உங்களுக்கு இழிவு மிக்க வேதனை கூலியாகத் தரப்படுகிறது என்று கூறுவார்கள்.'' (6:93)

மேலும் கூறுகிறான்:

اَلنَّارُ يُعْرَضُوْنَ عَلَيْهَا غُدُوًّا وَّعَشِيًّا ۚ وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ ۚ
اَدْخِلُوْٓا اٰلَ فِرْعَوْنَ اَشَدَّ الْعَذَابِ ۝

''(ஃபிர்அவ்னின் கூட்டத்தார்) நரகத்தின் முன்பு காலையிலும் மாலையிலும் ஆஜராக்கப்படுகிறார்கள். மேலும் மறு

மைநாள் வந்துவிடும்போது ஆணையிடப்படும்: ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை மிகக் கடுமையான வேதனையில் புகுத்துங்கள்.'' (40:46)

ஜைது இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நீங்கள் புதையுண்டு போவீர்கள் எனும் அச்சம் இல்லையானால் நான் செவியுறும் மண்ணறையின் வேதனையை உங்களுக்கும் கேட்கச் செய்திடுமாறு அல்லாஹ்விடம் நான் பிரார்த்தனை செய்திருப்பேன். பிறகு எங்களை முன்னோக்கிக் கூறினார்கள். ''நரகத்தின் வேதனையைவிட்டு அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள்''. தோழர்கள் சொன்னார்கள், நரகத்தின் வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம் என்று! பிறகு நபியவர்கள் சொன்னார்கள்: மண்ணறையின் வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள். அவ்வாறே மண்ணறையின் வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம் என்றனர். பிறகு நபியவர்கள் சொன்னார்கள்: பகிரங்கமான அந்தரங்கமான அனைத்துக் குழப்பங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள் என்று! அவ்வாறே தோழர்களும் பகிரங்கமான அந்தரங்கமான அனைத்துக் குழப்பங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம் என்றனர். பிறகு நபியவர்கள் சொன்னார்கள், தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள் என்று! தோழர்களும் ''தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்'' என்றார்கள். — ஸஹீஹ் முஸ்லிம்

கப்றின் இன்பமோ வாய்மையாளர்களாய் வாழ்ந்த இறைநம்பிக்கையாளர்களுக்குரியதாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

''எவர்கள் அல்லாஹ் எங்கள் இறைவன என்று கூறி பின்னர் அதில் உறுதியாக நிலைத்து நிற்கின்றார்களோ

திண்ணமாக அவர்கள் மீது வானவர்கள் இறங்குகிறார்கள். மேலும் (அவர்களிடம் கூறுகிறார்கள்:) அஞ்சாதீர்கள்; துயரப் படாதீர்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் சுவனத்தின் நற்செய்தி கொண்டு மகிழ்ச்சி அடையுங்கள்.'' (41:30)

இன்னோர் இடத்தில் கூறுகிறான்:

''நீங்கள் யாராலும் கட்டுப்படுத்தப்படாதவர்களாய் இருந்தால், உங்களுடைய இந்தக் கருத்தில் நீங்கள் உண்மையானவர்களாய் இருந்தால் (பின்வரும் சாதனையைச் செய்து காண்பியுங்கள்) இறந்து போகிற ஒருவரின் உயிர் தொண்டை வரை வந்து அவர் இறந்து கொண்டிருப்பதை நீங்கள் கண்களாலேயே பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் வெளியேறிக் கொண்டிருக்கும் அவருடைய உயிரை நீங்கள் ஏன் திரும்பக் கொண்டு வருவதில்லை. அப்போது உங்களைக் காட்டிலும் நாம் அவருக்கு மிக அண்மையில் இருக்கிறோம். ஆனால் அது உங்களுக்குத் தென்படுவதில்லை. பின்னர், மரணமடைகிற அந்த மனிதர் நெருக்கமானவர்களுள் ஒருவராக இருந்தால் அவருக்கு சுகமும் உயர்தரமான உணவும் அருட்பேறுகள் நிறைந்த சுவனமும் இருக்கின்றன.'' (56:89)

பராஉப்னு ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இறைநம்பிக்கையாளர் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள் ''அவர் தனது மண்ணறையில் இரண்டு மலக்குகளுக்கு பதில் அளித்திடும்போது, வானத்தில் இருந்து ஓர் அழைப்பாளர் (அல்லாஹ்வின் சார்பில்) உரக்கக் கூறுவார்: 'எனது அடியான் உண்மை உரைத்துவிட்டான். சுவனத்து விரிப்பை அவனுக்கு விரியுங்கள். சுவனத்தின் ஆடையை அவனுக்கு அணிவியுங்கள். சுவனம் செல்ல அவனுக்கு வழிதிறந்து விடுங்கள்' நபியவர்கள் சொன்னார்கள்: சுவனத்தின் வாசனையும் மணமும் அவரிடம் வரும். அவரது பார்வை செல்லும் தூரம் வரையில் அவரது மண்ணறை விரிவாக்கப்படும்.'' — முஸ்நத் அஹ்மத், அபூதாவூத்

**மறுமைநாளின் மீது ஈமான் கொள்வதன் மகத்தான பயன்களுள் சில:**

1. நன்மை செய்வதன் மீது ஆவலும் ஆர்வமும் கொள்வது — அந்த மறுமைநாளின் நற்கூலியை எதிர்பார்த்து!

2. பாவம் செய்ய அஞ்சுதல், அது குறித்து அதிருப்தி அடைதல் — மறுமை நாளுக்குப் பயந்து!

3. உலகத்தின் வசதிவாய்ப்புகள் தனக்குக் கிடைக்காமல் போவது குறித்து ஒரு விசுவாசி பொறுமை கொள்வது — ஆறுதல் அடைவது — மறுமைநாளின் அருட்பேறுகளும் அதன் நன்மைகளும் போதுமென எதிர்பார்த்து!

மரணத்திற்குப் பிறகு மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப் படுவது உண்டு என்பதை இறை நிராகரிப்பாளர்கள் மறுக்கிறார்கள். அது சாத்தியமில்லாதது எனக் கருதுகிறார்கள்.

அவர்களின் கருத்து தவறானது. அது தவறானது என்று இறைமார்க்கமும் புலனறிவும் பகுத்தறிவும் தெளிவுபடுத்துகின்றன.

**இறைமார்க்கத்தின் ஆதாரம்:**

அல்லாஹ் கூறுகிறான்:

இறந்தபின் மீண்டும் அவர்கள் ஒருபோதும் எழுப்பப் பட மாட்டார்கள் என்று இறை நிராகரிப்பாளர்கள் வாதாடுகிறார்கள். (அவர்களிடம்) நீர் கூறும்: ''இல்லை, என் இறைவனின் மீது சத்தியமாக நீங்கள் நிச்சயமாக எழுப்பப்படுவீர்கள். பின்னர் நீங்கள் (உலகில்) என்னென்னவெல்லாம் செய்தீர்கள் என்று உங்களுக்கு அறிவித்துக் கொடுக்கப்படும். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிகவும் எளிதானதாகும்.'' (64:7)

இறைவேதங்கள் அனைத்தும் இந்த உண்மையை ஒருமித்துக் கூறுகின்றன.

## மறுமை உண்டு என்பதற்கு புலனுணர்வின் ஆதாரம்:

*மரணித்தவர்களை உயிர்ப்பித்தெழுப்புவதை இந்த உலகத்திலேயே அல்லாஹ் தன் அடியார்களுக்குக் காண்பித்துக் கொடுத்துள்ளான். அல்பகறா எனும் திருக்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயத்தில் இதற்கு ஐந்து உதாரணங்கள் உள்ளன.*

## முதல் உதாரணம்:

*மூஸா நபி (அலை) அவர்களிடம் அவரது சமூகத்தார் ''அல்லாஹ்வைப் பகிரங்கமாக நாங்கள் பார்க்காதவரையில் உம்மை நம்பமாட்டோம்'' என்றபோது அல்லாஹ் அவர்களை மரணிக்கச் செய்தான்; பிறகு அவர்களை உயிர்ப்பித்தான். அது விஷயத்தில் பனூ இஸ்ராயீல்களை நோக்கி அல்லாஹ் கூறுகிறான்:*

*''மூஸாவே, நாங்கள் அல்லாஹ்வை (உம்முடன் உரையாடும் நிலையில் எங்கள் கண்களால்) பகிரங்கமாகக் காணாத வரை உமது கூற்றை நாங்கள் ஒருபோதும் நம்பமாட்டோம்'' என்று நீங்கள் கூறியதை நினைவு கூருங்கள்! அப்போது நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே உங்களை ஒரு பேரிடி தாக்கிற்று. உடனே நீங்கள் மாண்டு வீழ்ந்து விட்டீர்கள். அதன்பிறகும் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு உங்களை உயிர்ப்பித்து எழுப்பினோம். (2:55-56)*

## இரண்டாவது உதாரணம்:

*இது கொலை செய்யப்பட்ட ஒருவரின் கதையில் உள்ளது. அவர் விஷயத்தில்தான் பனூ இஸ்ராயீல்கள் தங்களுக்கிடையே தர்க்கித்துக் கொண்டார்கள். அப்போது அல்லாஹ் அவர்களுக்குக் கட்டளையிட்டான் — ஒரு பசுவை அறுத்து அதன் ஒரு பகுதியைக் கொண்டு, கொலை செய்யப்பட்ட அந்த நபரை அடிக்குமாறு! தன்னைக் கொன்றவர் யார் என்று அவர் தெரிவிப்பதற்காக!*

இதுபற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்.

''மேலும் இதனை நினைவு கூருங்கள்: நீங்கள் ஒருவரைக் கொலை செய்துவிட்டு அதுபற்றி தர்க்கித்து ஒருவர் மற்றொருவர் மீது குற்றம்சாட்டிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் நீங்கள் மறைத்துக் கொண்டிருந்ததை வெளிப்படுத்த அல்லாஹ் முடிவு செய்தான். ''(அறுக்கப்பட்ட) அப்பசுவின் ஒரு பாகத்தைக் கொண்டு கொலையுண்டவனை அடியுங்கள்'' என நாம் கட்டளையிட்டோம். (பாருங்கள்) இவ்வாறே அல்லாஹ், மரித்தவர்களை உயிர்ப்பிக்கின்றான். மேலும் நீங்கள் நல்லறிவு பெறும் பொருட்டு தன் அத்தாட்சிகளை உங்களுக்குக் காண்பிக்கின்றான். *(2:72-73)*

**மூன்றாவது உதாரணம்:**

இது மரணத்திற்குப் பயந்து தங்களின் இல்லங்களில் இருந்து வெளியேறிய கூட்டத்தாரின் வரலாற்றில் உள்ளது. அவர்கள் ஆயிரக் கணக்கானோர்! அல்லாஹ் அவர்களை மரணமாக்கினான். பிறகு உயிர்ப்பித்தான்.

அதுபற்றி அல்லாஹ் கூறுகிறான்:

''மரணத்திற்கு அஞ்சி தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியவர்களை நீர் கவனிக்கவில்லையா? அவர்களோ ஆயிரக்கணக்கில் இருந்தனர். நீங்கள் இறந்து விடுங்கள் என்று அல்லாஹ் அவர்களுக்குக் கூறினான். பின்னர் அவர்களை மீண்டும் உயிர்ப்பித்தான். உண்மையில் அல்லாஹ் மனிதர்களின் மீது பேரருள்பாலிப்பவனாக இருக்கிறான். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் நன்றி செலுத்துவதில்லை.'' *(2:243)*

**நான்காவது உதாரணம்:** அழிந்துகிடந்த ஒரு கிராமத்தை கடந்துசென்ற ஒரு மனிதரின் கதையில் உள்ளது. இப்படி அழிந்துவிட்ட கிராமத்தை அல்லாஹ் எங்கே உயிர்ப்பித்து உருவாக்கப் போகிறான் என்று அவர் அலட்சியமாகக் கருதினார்! அல்லாஹ் அவரை மரணமடையச் செய்து ஒரு

நூற்றாண்டு காலம்வரை அப்படியே கிடக்கச் செய்தான். பிறகு அவருக்கு உயிர்கொடுத்து எழுப்பினான்.

அல்லாஹ் கூறுகிறான்:

''முகடுகள் இடிந்து வீழ்ந்து கிடந்த ஓர் ஊரினைக் கடந்துசென்ற ஒரு மனிதரின் உதாரணத்தை நீர் கவனிக்கவில்லையா? அவர் (முற்றிலும்) அழிந்து போய்விட்ட இந்த ஊர் மக்களை அல்லாஹ் எப்படி மீண்டும் உயிர்ப்பிக்கப் போகிறான்? என வினவினார். அதற்கு அல்லாஹ் அவருடைய உயிரைக் கைப்பற்றி நூற்றாண்டுகள் அவரை உயிரற்றவராய்க் கிடக்கச் செய்தான். பின்னர் அவரை உயிர்த்தெழச் செய்து வினவினான்: நீர் எவ்வளவு காலம் இவ்வாறு கிடந்தீர்? அதற்கு அவர், ஒருநாள், அல்லது சில மணி நேரங்கள் நான் இப்படிக் கிடந்திருப்பேன் என்று கூறினார். அல்லாஹ் கூறினான்: 'இல்லை (இந்நிலையிலேயே) நீர் நூறாண்டுகள் கிடந்தீர்! உமது உணவையும் பானத்தையும் சற்றுப் பாரும். அவை சிறிதும் கெட்டுப் போகவில்லை. மேலும் உமது கழுதையைப் பாரும்! (அதன் எலும்புகள் கூட மக்கிப் போய்விட்டன). உம்மை மக்களுக்கோர் சான்றாக விளங்கச் செய்வதற்காகவே நாம் இவ்வாறு செய்தோம். அந்த எலும்புகளை நாம் எவ்வாறு ஒன்று சேர்த்து பின்னர் சதையால் அவற்றைப் போர்த்துகிறோம் என்பதைப் பாரும். இப்படி உண்மை அவருக்குத் தெளிவானபோது திண்ணமாக அல்லாஹ் எல்லாப் பொருள்களின் மீதும் பேராற்றலுடையவன் என்பதை நான் அறிகிறேன் என்று கூறினார்.'' (2:259)

**ஐந்தாவது உதாரணம்:** இது இறையன்பரான நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் சரிதையில் உள்ளது. மரணித்தவர்களை எவ்வாறு அல்லாஹ் உயிர்ப்பிக்கிறான் என்பதைத் தனக்குக் காண்பித்துத் தருமாறு ஒருபோது அல்லாஹ்விடம் இப்ற[illegible] நட[illegible] வினவினார்கள். அ[illegible]ற்கு நான்கு பறவை

களை அறுக்குமாறும் அவற்றைத் துண்டு துண்டுகளாக்கி அவருக்கு அருகில் உள்ள மலைகளின் மீது அவற்றை வைக்குமாறும் பிறகு அவற்றை அழைக்குமாறும் அல்லாஹ் அவருக்குக் கட்டளையிட்டான். அந்த இறைச்சித் துண்டுகள் ஒன்றோடு ஒன்று இணைந்து மீண்டும் பறவைகளாய் அவரை நோக்கிப் பறந்துவரும் என்றான்.

இதுபற்றி பின்வரும் வசனங்களில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

''என் இறைவனே, மரணித்தோரை நீ எவ்வாறு உயிர்ப் பிக்கிறாய் என்பதை எனக்குக் காண்பித்துத் தருவாயாக'' என்று இப்றாஹீம் கூறியதையும் நினைவு கூர்வீராக. அதற்கு இறைவன் 'நீர் நம்பிக்கை கொள்ளவில்லையா?' என்று கேட்டான். 'ஆம்! (நம்பிக்கை கொண்டுள்ளேன்) எனினும் எனது மனம் அமைதி அடையும் பொருட்டே கேட்கிறேன்' என்று அவர் கூறினார். அதற்கு அல்லாஹ், ''அப்படியானால் நீர் நான்கு பறவைகளைப் பிடித்து அவற்றை (நன்கு பழக்கி) உம்முடன் இணங்கி இருக்கச் செய்யும். பின்னர் (அவற்றைத் துண்டுகளாக்கி) அவற்றின் ஒவ்வொரு பாகத்தையும் ஒவ் வொரு மலையில் வைத்துவிடும். பிறகு அவற்றை நீர் கூப்பிடும். அவை உம்மிடம் விரைந்து வரும். மேலும் அல்லாஹ் நிச்சயமாக வல்லமைமிக்கோனும் நுண்ணறிவாள னுமாயிருக்கிறான் என்பதை நீர் நன்கு அறிந்து கொள்ளும்'' என்று கூறினான். (2:260)

இந்த ஐந்தும் உண்மையில் நடைபெற்ற, புலனுக்குட் பட்ட உதாரணங்களாகும். மரணித்தவர்களை உயிர்ப்பித்து எழுப்புவது சாத்தியமே என இவை தெளிவுபடுத்துகின்றன! — மரணித்தவர்களை — அல்லாஹ்வின் அனுமதி கொண்டு உயிர்ப்பிப்பது, அவர்களை மண்ணறைகளில் இருந்து வெளிக் கொணர்வது போன்ற விஷயங்களில் ஈஸா நபி (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருந்த சான்று களை முன்னர் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**பகுத்தறிவின் சான்றுகள்:**

ஒன்று — திண்ணமாக அல்லாஹ்தான், இந்த வானங்கள், பூமி அவற்றில் உள்ள படைப்புகள் ஆகிய அனைத்தையும் உண்டாக்கியவன்! அவற்றை முதன் முதலாகப் படைத்தவன் அவனே. படைப்புகளை முதன் முதலாகப் படைக்கும் ஆற்றல் கொண்ட இறைவனுக்கு அவற்றை மீண்டும் படைப்பதற்கு முடியமல் போகாது!

அல்லாஹ் கூறுகிறான்:

وَهُوَ الَّذِي يَبْدَؤُا الْخَلْقَ ثُمَّ يُعِيدُهُ وَهُوَ أَهْوَنُ عَلَيْهِ

''படைப்புகளை முதன்முதலாகப் படைத்தவன் அவனே. பின்னர் மறுமுறையும் அவனே அவற்றைப் படைப்பான். அது அவனுக்கு எளிதான காரியமே.'' *(30:27)*

வேறோர் இடத்தில் —

''நாம் முதலில் எவ்வாறு படைக்கத் தொடங்கினோமோ அவ்வாறே நாம் மீண்டும் படைப்போம். இது நம்முடைய பொறுப்பில் உள்ள ஒரு வாக்குறுதியாகும். திண்ணமாக அதனை நாம் நிறைவேற்றியே தீருவோம்.''
*(21:104)*

மற்றோர் இடத்தில் —

''கூறும்: எவன் முதலில் அவற்றைப் படைத்தானோ அவனே அவற்றை உயிர்ப்பிப்பான். மேலும் அவன் படைப்பு நுட்பம் ஒவ்வொன்றையும் நன்கறிந்தவனாவான்.''
*(36:79)*

இரண்டாவதாக: இந்தப் பூமி பசுமையான மரமோ செடியோ எதுவுமின்றி வறண்டு தரிசாகக் கிடக்கிறது; பிறகு மழை பொழிந்தவுடன் உயிர்பெற்று பசுமையாய்ச் சிலிர்த்

தெழுகிறது. அனைத்துவிதமான அழகிய தோற்றமுடைய தாவரங்கள் அதில் முளைக்கின்றன. இறந்து கிடக்கும் பூமிக்கு உயிர் கொடுக்கும் ஆற்றல் படைத்த இறைவன் இறந்தவர்களையும் உயிர்ப்பித்தெழுப்பும் ஆற்றல் கொண்டவன்தான்.

அல்லாஹ் கூறுகிறான்:

''பூமி வறண்டு கிடப்பதையும் அதில் நாம் மழையைப் பொழிந்தவுடன் அது சட்டென்று சிலிர்த்தெழுவதையும் தழைத்தோங்குவதையும் நீர் காண்கிறீர். இது அல்லாஹ்வின் சான்றுகளில் ஒன்றாகும். திண்ணமாக இறந்து கிடக்கும் இப்பூமிக்கு எந்த இறைவன் உயிரூட்டினானோ அந்த இறைவன் இறந்த மனிதர்களுக்கும் (மறுமைநாளில்) உயிர்கொடுத்து எழுப்பக் கூடியவனாவான். திண்ணமாக அவன் ஒவ்வொன்றின் மீதும் ஆற்றல் கொண்டவனாக இருக்கிறான்.'' *(41:39)*

மேலும் கூறுகிறான்:

''மேலும் நாம் வானத்திலிருந்து அருள்மிக்க நீரினை இறக்கினோம். அதன் மூலம் தோட்டங்களையும் அறுவடை தானியங்களையும் கனிகள் நிறைந்து குலைகள் அடுக்கடுக்காய்த் தொங்குகிற நீண்ட நெடிய பேரீச்சை மரங்களையும் முளைக்கச் செய்தோம்; மக்களுக்கு வாழ்வாதாரம் வழங்குவதற்காக! இறந்துகிடக்கும் பூமிக்கு இந்த நீரினால் நாம் உயிரூட்டுகிறோம். (இறந்துவிட்ட மனிதர்கள் பூமியிலிருந்து) வெளிப்படுவதும் இவ்விதமேயாகும்.'' *(50:9-11)*

கோணல் புத்தியுடைய சிலர் மண்ணறையில் வேதனையும் இன்பமும் உண்டு என்பதை மறுக்கிறார்கள். அது சாத்தியமில்லாதது; காரணம் யதார்த்த நிலையில் அவ்வாறில்லை என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள்: ''மண்ணறையைத் தோண்டிப் பார்த்தோமானால் பிரேதம் முன்பிருந்த நிலையிலேயே இருக்கிறது.

மேலும் விரிவடைதல், சுருங்குதல் போன்ற எந்த மாற்றமும் மண்ணறையில் ஏற்படுவதில்லை!''

இந்தக் கருத்து தவறானது; இறைமார்க்கம், புலனுணர்வு, பகுத்தறிவு ஆகியவற்றின் அடிப்படையில்!

## இறை மார்க்கத்தின் ஆதாரம்:

*மண்ணறையில் வேதனையும் இன்பமும் உண்டு என்று நிரூபிக்கக் கூடிய குர்ஆன் வசனங்கள் பற்றி முன்னர் விளக்கப் பட்டுள்ளது, மறுமைநாளின் மீது ஈமான் கொள்ளுதல் எனும் பகுதியில்!*

*இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். ''அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனாவின் தோட்டங்கள் ஒன்றிலிருந்து வெளியேறினார்கள்; அப்போது தத்தம் மண்ணறையில் வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருந்த இரண்டு மனிதர்களின் சப்தத்தைக் கேட்டார்கள். (அந்த ஹதீஸில் தொடர்ந்து சொல்லப்பட்டுள்ளது) அவர்களில் ஒருவர் சிறு நீரை (மற்றோர் அறிவிப்பில் தனது சிறுநீரை)ச் சரியாக சுத்தம் செய்யாதவராக இருந்தார். மற்றொருவர் கோள் சொல்லிக் கொண்டு திரிந்தார்'' — புகாரி*

## புலனுணர்வின் ஆதாரம்:

*தூங்கிக் கொண்டிருப்பவன் கனவு காண்கிறான். அழகான விசாலமான ஓர் இடத்தில் மகிழ்வாக இருப்பதாகவோ அல்லது மனம் விரும்பாத நெருக்கடியான ஓர் இடத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகவோ கனவு காண்கிறான். சிலபோது கனவில் கண்ட காட்சியினால் தூக்கம் கலைந்து திடீரென விழிக்கிறான்! ஆனால் அவனோ தனது அறையில் தனது படுக்கையில் சாதாரணமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறான். 'உறக்கம் மரணத்தின் சகோதரன்! இதனால்தான் அல்லாஹ் அதனை வஃபாத் — மரணம் என்று இந்த வசனத்தில் குறிப்பிடுகிறான்:*

''அல்லாஹ் மரணத்தின் போது உயிர்களைக் கைப்பற்று கிறான் (அவ்வாறே) இதுவரை மரணிக்காதவர்களின் உயிர்க ளைத் தூக்கத்தின் போது கைப்பற்றுகிறான். பிறகு எவர்க ளின் மீது மரணத்தை விதிக்கிறானோ அவர்களின் உயிரைத் தடுத்து வைத்துக் கொள்கிறான். மற்றவர்களின் உயிர்களை ஒரு குறிப்பிட்ட தவணை வரை திருப்பி அனுப்புகிறான்.''
(39:42)

## பகுத்தறிவின் ஆதாரம்:

தூங்கிக் கொண்டிருப்பவன் உண்மையான — யதார்த்த நிலைக்கு ஒத்துவரக்கூடிய கனவைக் காண்கிறான். சிலபோது நபி (ஸல்) அவர்களை, அவர்களின் உண்மையான வடிவத்து டன் காண்கிறான். நபியவர்களை அப்படி கனவு காண்பவர் உண்மையில் நபியவர்களையே கனவு கண்டவர் ஆவார் — ஆனால் தூங்கிக் கொண்டிருப்பவரோ தனது அறையில், தனது படுக்கையில் — தான் கண்ட காட்சியைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறார்! உலகத்து நிலைகளைப் பொருத்து இது சாத்தியமானதாக இருக்குமானால் மறுவுல கத்தின் நிலைகளைப் பொருத்து இது சாத்தியமானதாக இருக்காதா என்ன?

'மண்ணறையில் வேதனையோ இன்பநிலையோ எதுவு மில்லை' என்போர் தங்களின் கருத்துக்கு ஆதாரமாகக் கூறு வது என்ன? ''மண்ணறையைத் தோண்டிப் பார்த்தால் பிரே தம் இருந்த நிலையிலேயே இருக்கிறது; மண்ணறை விரிவ டைவதுமில்லை; குறுகுவதுமில்லை'' என்பதுதான்!

இதற்கான பதில்கள் வருமாறு:

1. இறைமார்க்கம் கூறுகிற கருத்துக்களை இதுபோன்ற பலவீனமான சந்தேகங்களைக் கொண்டு ஆட்சேபிக்க முடி யாது. இவற்றைக் கொண்டு ஆட்சேபிப்பவர்கள் இறைமார்க் கம் சொல்கிற கருத்துக்களைச் சரியாக சிந்தித்துப் பார்த்தார்க ளேயானால் இந்தச் சந்தேகங்கள் தவறானவை என்பதை அறிந்து கொள்வார்கள்.

2. மண்ணறையில் நடப்பவை யாவும் மறைவான உண்மைகளைச் சேர்ந்ததாகும். புலனால் அவற்றை அறிந்திட முடியாது. அவை புலனால் உணரப்படக் கூடியதாக இருந்தால் 'மறைவான உண்மைகளை நம்புதல்' என்பதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும். மட்டுமல்ல, அவற்றின் மீது நம்பிக்கை கொள்வோரும் மறுப்போரும் சரிசமமாகிவிடுவார்கள்!

3. மண்ணறையின் வேதனையையோ, இன்பத்தையோ அதன் விரிவையோ நெருக்கடியையோ அனுபவிப்பது மரணித்தவர்தானே தவிர மற்றவரல்லர். தூக்கத்திலிருப்பவர் — மனதிற்கு வெறுப்பான நெருக்கடியான இடத்தில் இருப்பதாகவோ அல்லது அழகான விரிவான இடத்தில் இருப்பதாகவோ கனவு காண்பது போன்றதாகும் இது! ஆனால் அவனுக்கு அருகில் உள்ளவர்களைக் கேட்டால் — அவர் தனது அறையில்; படுக்கையில்; போர்த்திக் கொண்டு படுத்திருக்கிறார். தூங்கிக் கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்வார்கள்!

மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு — அவர்கள் தம் தோழர்களுடன் இருந்து கொண்டிருக்கும் நிலையில் வஹி (எனும் இறைச் செய்தி) அனுப்பப்பட்டது. அதனை நபியவர்கள் செவிமெடுத்தார்கள். தோழர்களின் காதில் எதுவும் விழவில்லை! சிலபோது வானவர் மனித வடிவத்தில் நபியவர்களிடம் வருகை தந்தார். அவர்களிடம் உரையாடினார். ஆனால் தோழர்கள் யாரும் வானவரைப் பார்க்கவில்லை. அவரது உரையாடலை அவர்களால் கேட்க முடியாதிருந்தது!

4. மனிதர்களின் அறிவு — அல்லாஹ் தனது அறிவில் இருந்து எந்த அளவு அவர்களுக்கு வழங்கியுள்ளானோ அந்த அளவின் வட்டத்திற்குட்பட்டதாகும். அவர்களால் எல்லாவற்றையும் அறிய முடியாது!

ஏழு வானங்களும் பூமியும் இவற்றில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருக்கின்றன; யதார்த்தமான துதியாக! சிலபோது அல்லாஹ் அதனைத் தான் விரும்புகிறவர்களுக்குச் செவியேற்கச் செய்கிறான். அத்துடனே நாம் அவனைக் காண முடியாதவாறு மறைவாக இருக்கிறான்.

இதுபற்றியே அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்: ''ஏழு வானங்களும் பூமியும் இவற்றிலுள்ள அனைத்துமே அவனைத் துதித்துக் கொண்டிருக்கின்றன. அவனைப் புகழ்வதுடன் துதி செய்து கொண்டிராத எந்த ஒரு பொருளும் இல்லை. ஆயினும் அவை துதி செய்வதை நீங்கள் புரிந்து கொள்வதில்லை.'' *(17:44)*

இவ்வாறே ஷைத்தான்களும் ஜின்களும் பூமியில் இங்கும் அங்கும் சுற்றித் திரிகின்றன. ஜின்கள் நபி (ஸல்) அவர்களிடம் வருகை தந்தன. அவர்கள் ஓதுவதை மௌனமாக இருந்து செவியேற்றன! பிறகு அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகத் தமது சமூகத்தாரிடம் திரும்பிச் சென்றன. அத்துடனே அவை — நாம் காண முடியாதவாறு மறைவாக உள்ளன!

இதுபற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

''ஆதத்தின் மக்களே, எவ்வாறு ஷைத்தான் உங்கள் தாய் தந்தையரை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றினானோ மேலும் அவர்களுடைய வெட்கஸ்தலங்களை பரஸ்பரம் வெளிப்படுத்திட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய ஆடைகளைக் களைந்தானோ அவ்வாறு மீண்டும் அவன் உங்களைக் குழப்பத்திலாழ்த்திட வேண்டாம். அவனும் அவனுடைய நண்பர்களும் உங்களைப் பார்க்கிறார்கள்; நீங்கள் அவர்களைப் பார்க்க முடியாத வகையில்! திண்ணமாக இறைநம்பிக்கை கொள்ளாதவர்களுக்கு இந்த ஷைத்தான்களை நண்பர்களாய் ஆக்கியுள்ளோம்.'' (7:27)

மனிதர்கள் எல்லாவற்றையும் அறிய முடியாதவர்களாக இருக்கும்போது — மறைவான உண்மைகள் என நிருபணமானவற்றை — தாங்களால் அறிய இயலவில்லை என்பதனால் அவர்கள் நிராகரிப்பது கூடாது!

## விதியின் மீது ஈமான் — நம்பிக்கைக் கொள்வது

அல்கதர் (விதி) என்பது படைப்பினங்களுக்கு அல்லாஹ் நிர்ணயித்து வைத்திருக்கும் ஏற்பாடாகும். எல்லாவற்றையும் முன்னரே அவன் அறிந்திருப்பதற்கு ஏற்பவும் அவனது விவேகத்தின் தேட்டப்படியும் நிர்ணயிக்கப்பட்டதாகும் இது.

விதியின் மீது நம்பிக்கை கொள்வதில் நான்கு விஷயங்கள் உண்டு.

1. அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் பொதுவாகவும் விரிவாகவும் ஆதி முதல் அந்தம்வரையிலும் அறிந்திருக்கிறான் என நம்புவது. அது அவனுடைய செயல்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களாயினும் அல்லது அவனுடைய அடியார்களின் செயல்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களாயினும் சரியே!

2. இந்த விவரங்களை அல்லாஹ் 'லவ்ஹுல் மஹ்ஃபூழ்' எனும் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் எழுதி வைத்துள்ளான் என நம்புவது.

இந்த இரண்டு விஷயங்கள் பற்றியும் அல்லாஹ் பின்வரும் வசனத்தில் குறிப்பிடுவதாவது:

''நீர் அறியவில்லையா? வானத்திலும் பூமியிலும் உள்ள அனைத்தையும் அல்லாஹ் அறிகிறான் என்பதை! அவை அனைத்தும் ஓர் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. திண்ணமாக இது அல்லாஹ்வுக்கு சற்றும் சிரமமானதன்று.'' (22:69)

كَتَبَ اللهُ مَقَادِيرَ الْخَلَائِقِ قَبْلَ أَنْ يَخْلُقَ السَّمٰوَاتِ وَالْأَرْضَ بِخَمْسِينَ أَلْفَ سَنَةٍ.

அப்துல்லாஹ் இப்னு அம்ரிப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:''நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டிருக்கிறேன். ''அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைப்பதற்கு 50 ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே படைப்பினங்களின் விதியை எழுதிவிட்டான்.''

ஸஹீஹ் முஸ்லிம்

3. நிகழுபவை அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே தவிர நிகழுவதில்லை என நம்பிக்கை கொள்வது — அவை அல்லாஹ்வுடைய செயல் சம்பந்தப்பட்டவை என்றாலும் சரி; படைப்பினங்களின் செயல் சம்பந்தப்பட்டவை என்றாலும் சரியே!

அல்லாஹ் தனது செயல் சம்பந்தப்பட்டவை பற்றி இவ்வாறு கூறுகிறான்:

''மேலும் உம்முடைய இறைவன் தான் நாடுவதைப் படைக்கிறான். மேலும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்.''

(28:68)

மற்றோர் இடத்தில்:

''மேலும் தான் நாடுவதை செய்கிறான்.'' (14:27)

மற்றோர் இடத்தில்,

هُوَ الَّذِي يُصَوِّرُكُمْ فِي الْأَرْحَامِ كَيْفَ يَشَاءُ

*''அவனே (உங்கள் அன்னையரின்) கருவறைகளில் தான் நாடுகிறவாறு உங்கள் உருவங்களை அமைக்கிறான்.'' (3:6)*

*படைப்பினங்களின் செயல் சம்பந்தமாகக் கூறுகிறான்: ''அல்லாஹ் நாடியிருந்தால் உங்களின் மீது (அந்த நயவஞ்சகர் களின்) ஆதிக்கத்தை திணித்திருப்பான். அவர்களும் உங்க ளுக்கு எதிராகப் போர் புரிந்திருப்பார்கள்.'' (4:90)*

இன்னோர் இடத்தில்,

*''உம்முடைய இறைவன் நாடியிருந்தால் அவர்கள் ஒரு போதும் இச்செயலைச் செய்திருக்க மாட்டார்கள். எனவே நீர் அவர்களை விட்டுவிடும்; அவர்கள் புனைந்துரைத்துக் கொண்டிருக்கட்டும்.'' (6:112)*

*4. உலகில் உள்ளவை அனைத்தும் - அவற்றின் உள் ளமை, தன்மைகள், அசைவுகள் உட்பட அனைத்துமே அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவையாகும் என நம் பிக்கை கொள்வது.*

*அல்லாஹ் கூறுகிறான்:*

*''அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் படைத் தவனாவான். அவனே ஒவ்வொரு பொருளுக்கும் பொறுப் பாளனாக இருக்கிறான்.'' (39:62)*

இன்னோர் இடத்தில்,

*''மேலும் அவன் ஒவ்வொரு பொருளையும் படைத் தான். பிறகு அவை ஒவ்வொன்றுக்கும் விதியை நிர்ணயம் செய்தான்.'' (25:2)*

இப்றாஹீம் நபி (அலை) அவர்கள் தம் கூட்டத்தாரை நோக்கி கூறியதுபற்றி குறிப்பிடும்போது —

''உண்மையில் அல்லாஹ்தானே உங்களையும் படைத்தான்; நீங்கள் உருவாக்குகிற இப்பொருள்களையும் படைத்தான்.'' *(37:96)*

விதியை — நாம் கூறிய விளக்கத்தின்படி — நம்புவதென்பது மனிதனுக்கு, அவனது சுயமான செயல்களில் நாட்டமும் ஆற்றலும் உண்டு என்பதற்கு முரணாகாது. ஏனெனில், இறைமார்க்கமும் யதார்த்த நிலையும் அப்படியே எடுத்துரைக்கின்றன.

இறைமார்க்கம்: மனிதனுக்கு அவனது செயலில் சுய நாட்டம் உண்டு என்பது பற்றி பின்வரும் வசனத்தில் கூறப்படுகிறது:

''எனவே, நாடியவர் தம்முடைய இறைவனின் பக்கம் மீளும் பதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்.'' *(78:39)*

வேறோர் இடத்தில்,

''நீங்கள் விரும்பும் முறையில் உங்களுக்குரிய விளைநிலங்களுக்குச் செல்லுங்கள்.'' *(2:223)*

சுய ஆற்றலும் உண்டு என்பது பற்றி - கூறப்படுகிறது:

''எனவே உங்களால் முடிந்தவரை அல்லாஹ்வுக்கு அஞ்சிய வண்ணம் வாழுங்கள். மேலும் செவிதாழ்த்திக் கேளுங்கள்; கீழ்ப்படியுங்கள்.'' *(64:16)*

மற்றோர் இடத்தில் —

لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ

''அல்லாஹ் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக (பொறுப்புகளைச் சுமத்தி) சிரமப்படுத்துவதில்லை.

*அவர் சம்பாதித்த நன்மையின் பலனும் அவருக்கே; அவர் சம்பாதித்த தீமையின் விளைவும் அவருக்கே!'' (2:286)*

**யதார்த்த நிலை:** ஒவ்வொரு மனிதருக்கும் தெரியும், நாட்டமும் ஆற்றலும் தனக்கு உண்டு என்பது! அவ்விரண்டைக் கொண்டே அவர் செயல்படுகிறார். அவ்விரண்டைக் கொண்டே செயல்படாமல் விட்டுவிடுகிறார்.

தனது நாட்டத்துடன் உண்டாகும் செயல்களையும் தனது நாட்டமின்றி உண்டாகும் செயல்களையும் வெவ்வேறாகப் பார்க்கிறார். முந்தியதற்கு உவமை, நடப்பது. இரண்டாவதற்கு உவமை: கால்கள் நடுங்குவது. ஆனாலும் ஓர் அடியானின் நாட்டமும் அவனது ஆற்றலும் அல்லாஹ்வின் நாட்டத்தைக் கொண்டும் அவனது ஆற்றலைக் கொண்டும்தான் நிகழ்கின்றன.

ஏனெனில் அல்லாஹ் கூறுகிறான்:

*''(இந்தக் குர்ஆன்) உங்களில் நேர்வழியில் நடந்திட விரும்பும் ஒவ்வொருவருக்கும் உரியது. மேலும் நீங்கள் நாடுவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை; இப்பேரண்டம் முழுவதற்கும் அதிபதியான அல்லாஹ் நாடாத வரையில்!'' (81:28)*

மட்டுமல்ல, இந்த உலகம் முழுவதும் அல்லாஹ்வுக்கு உடைமையானது. அவனுக்கு உடைமையான ஒன்றில் அவன் அறியாமலும் அவன் நாடாமலும் எதுவும் நிகழ்வதில்லை!

விதியின் மீது — நாம் விளக்கியுள்ளபடி நம்பிக்கை கொள்ள வேண்டுமென்பதால் மனிதன் தனது கடமைகளை விட்டு விடுவதற்கோ பாவங்கள் செய்வதற்கோ ஆதாரம் கிடைத்துவிடாது! இதற்கெல்லாம் விதியை ஆதாரமாகக் காட்டுவது பல கோணங்களில் தவறானதாகும்.

1. அல்லாஹ் கூறுகிறான்:

''(நபியே, உமது கூற்றுக்கு மறுமொழியாக) இணை வைப்பாளர்கள் கூறுவார்கள்: 'அல்லாஹ் நாடியிருந்தால் நாங்கள் இறைவனுக்கு இணைவைத்திருக்க மாட்டோம்; எங்கள் மூதாதையர்களும் இணைவைத்திருக்க மாட்டார்கள். மேலும் நாங்கள் எந்தப் பொருளையும் ஹராம் — தடை செய்திருக்க மாட்டோம்'. இவர்களுக்கு முன்வாழ்ந்து சென்றவர்களும் இப்படிக் கூறித்தான் சத்தியத்தைப் பொய்ப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இறுதியில் நமது வேதனையின் சுவையை அவர்கள் அனுபவித்தார்கள். இவர்களிடம் நீர் கூறும்: அறிவார்ந்த ஆதாரம் ஏதேனும் உங்களிடம் உண்டா? இருந்தால் அதனை எங்கள் முன் எடுத்து வையுங்கள். நீங்கள் வெறும் யூகத்தைதான் பின்பற்றிச் செல்கிறீர்கள். மேலும் நீங்கள் கற்பனையின் அடிப்படையில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்!'' (6:148)

— விதியின் மூலம் அவர்களுக்கு ஆதாரம் கிடைத்திருந்தால் அல்லாஹ் வேதனையின் சுவையை அவர்களுக்கு அனுபவிக்கக் கொடுத்திருக்க மாட்டான்!

2. அல்லாஹ் கூறுகிறான்:

''தூதர்களை — நற்செய்தி அறிவிப்பவர்களாகவும் எச்சரிக்கை செய்பவர்களாகவும் அனுப்பி வைத்தோம். ஏனெனில், இத்தூதர்களை அனுப்பிய பிறகு அல்லாஹ்விடம் முறையிட மக்களுக்கு ஆதாரம் எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காக! மேலும் (எந்நிலையிலும்) அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும் நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான்.'' (4:165)

மாறு செய்து வாழ்ந்த மக்களுக்கு விதி ஆதாரமாக இருந்திருந்தால் ரஸூல்மார்களை அனுப்புவதன் மூலம் அந்த ஆதாரம் எடுபட்டு போயிருக்காது! ஏனெனில் தூதர்களை அனுப்பிய பிறகும் (இறைக் கட்டளைக்கு) மாறுசெய்

யும் நிலை அல்லாஹ்வின் விதிப்படி நிகழக் கூடியதாக இருந்தது!

مَا مِنْكُمْ مِنْ اَحَدٍ اِلَّا قَدْ كُتِبَ مَقْعَدُهُ مِنَ النَّارِ اَوْ مِنَ الْجَنَّةِ
فَقَالَ رَجُلٌ مِنَ الْقَوْمِ، اَلَا نَتَّكِلُ يَا رَسُوْلَ اللهِ؟ قَالَ: لَا
اِعْمَلُوْا كُلٌّ مُيَسَّرٌ، ثُمَّ قَرَأَ « فَاَمَّا مَنْ اَعْطٰى وَاتَّقٰى

3. ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஒரு நபிமொழி: அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: ''உங்களில் ஒவ்வொருவரைக் குறித்தும் அவரது இருப்பிடம் நரகத்திலா அல்லது சுவர்க்கத்திலா என்று எழுதப்படாமல் இல்லை.'' தோழர்களில் ஒருவர் வினவினார். அல்லாஹ்வின் தூதரே, நாங்கள் இதனைச் சாக்காகக் கொண்டு இருந்து விடட்டுமா? நபியவர்கள் சொன்னார்கள்: ''கூடாது! நீங்கள் செயல்படுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறாரோ அதைச் செய்ய அவருக்கு இலகுவாக்கப்படுகிறது.

ஸஹீஹ்முஸ்லிமில் உள்ள மற்றோர் அறிவிப்பில்: ஒவ்வொருவருக்கும் — அவரவர் படைக்கப்பட்ட நோக்கத்தின் பால் செல்லும் வழி இலகுவாக்கப்படுகிறது''. பிறகு நபி (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

اِنَّ سَعْيَكُمْ لَشَتّٰى ۝ فَاَمَّا مَنْ اَعْطٰى وَاتَّقٰى ۝ وَصَدَّقَ
بِالْحُسْنٰى ۝ فَسَنُيَسِّرُهٗ لِلْيُسْرٰى ۝ وَاَمَّا مَنْ بَخِلَ
وَاسْتَغْنٰى ۝ وَكَذَّبَ بِالْحُسْنٰى ۝ فَسَنُيَسِّرُهٗ لِلْعُسْرٰى ۝

''எனவே எவர் (இறை வழியில்) பொருளை வழங்கினாரோ மேலும் இறைவனுக்கு மாறு செய்யாதிருந்தாரோ

மேலும் நன்மையை உண்மையென ஏற்றுக் கொண்டாரோ அவருக்கு இலகுவான வழியில் செல்வதற்கு நாம் வகை செய்வோம். ஆனால் எவர் கஞ்சத்தனம் செய்தாரோ மேலும் (தன் இறைவனைப்) பொருட்படுத்தாமல் நடந்தாரோ, நன்மையை பொய்யென நிராகரித்தாரோ அவருக்கு கடினமான வழியில் செல்வதற்கு நாம் வகை செய்வோம்.'' *(92:4-7)*

நபி (ஸல்) அவர்கள் அமல் செய்யும்படி ஏவினார்கள். விதியே சாக்கு' என உட்கார்ந்திருப்பதைத் தடுத்துள்ளார்கள்!

4. அல்லாஹ் மனிதனைச் சில கடமைகளைச் செய்யுமாறு ஏவியிருக்கிறான்; சிலவற்றையிட்டு விலக்கியும் இருக்கிறான். மேலும் அவனது சக்திக்கு உட்பட்டதைக் கொண்டே தவிர வேறெதையும் அவன்மீது அல்லாஹ் சுமத்தவில்லை!

அல்லாஹ் கூறுகிறான்.

''உங்களால் முடிந்த அளவில் அல்லாஹ்வுக்கு அஞ்சி வாழ்ந்து வாருங்கள்.'' *(64:16)*

வேறோர் இடத்தில்:

''அல்லாஹ் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக (பொறுப்புகளைச் சுமத்தி) சிரமப்படுத்துவதில்லை.'' *(2:286)*

செயலில் மனிதன் நிர்பந்திக்கப்படுபவனாக இருந்திருந்தால் செய்து முடிக்க முடியாத காரியத்தைச் செய்யுமாறு சிரமப்படுத்தப்பட்டிருப்பான்! அது தவறு! அதனால்தான் அறியாமலோ மறதியாகவோ நிர்ப்பந்தமாகவோ அவன் பாவம் புரிந்துவிட்டால் அதன்பேரில் அவன் குற்றம் சுமத்தப்படுவதில்லை. ஏனெனில் அவன் தக்க காரணம் உடையவனாக இருக்கிறான்.

5. அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்ட விதி மறைக்கப்பட்டதொரு ரகசியமாகும். பதிவிக்கப்பட்ட செயல் நிகழ்ந்த

பிறகே தவிர விதியை அறிய முடிவதில்லை! மேலும் மனிதனின் நாட்டம் அவனது செயலை முந்தியதாய் இருக்கிறது. எனவே மனிதன் ஒன்றைச் செய்ய வேண்டுமென நாடுவது அதனை அவன் அறிந்திருப்பதன் மீது அமைக்கப் பட்டதல்ல; அல்லாஹ்வின் விதிப்படி! ஆகையால் விதியை மனிதன் ஆதாரமாகக் காட்டுவது எடுபடாமல் போகிறது. ஏனெனில் மனிதனுக்கு அவன் அறிந்திராத விஷயங்களில் எந்த ஆதாரமும் இல்லை.

6. உலக விவகாரங்களில் மனிதன் தனக்கு இணக்கமானவற்றின் மீது ஆவல் கொள்வதை காண்கிறோம்; அதை அடைந்தே தீருவது என்று துடிக்கிறான். அவற்றை விடுத்து அவனுக்கு இணக்கமில்லாதவற்றின் பால் அவன் போவதில்லை! அப்படிச் செய்யாததற்கு விதியை ஆதாரமாகக் காட்டுவதில்லை. அப்படியாயின் மார்க்க விவகாரங்களில் அவனுக்குப் பயனளிப்பதை ஏன் அவன் செய்வதில்லை? அதற்காக, விதியை ஏன் ஆதாரமாகக் காட்டுகிறான். இவ்விரு நிலைகளும் சமமானவையாக இல்லைதானே?

இதனைத் தெளிவுபடுத்தக் கூடிய ஓர் உதாரணத்தை உனக்குத் தருகிறேன்.

ஒரு மனிதனுக்கு எதிரிலே இரண்டு பாதைகள் இருக்கின்றன. ஒரு பாதை — சட்டம் ஒழுங்கு இல்லாத, கொலை, கொள்ளை நடைபெறுகிற, மானம் மரியாதைகள் பங்கப்படுத்தப்படுகிற, அச்சமும் பட்டினியும் நிலவுகிற ஊரை நோக்கிச் செல்கிறது. இரண்டாவது பாதை - சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படுகிற, நீடித்த அமைதியும் நிறைவாழ்வுமுடைய, உயிர், உடைமை, மான மரியாதை ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கப்படுகிற ஊரை நோக்கிச் செல்கிறது. இந்த இரண்டு பாதைகளில் எந்தப் பாதையில் அவன் நடந்து செல்வான்?

சட்டம் ஒழுங்கும் அமைதியும் உள்ள ஊருக்குச் சென்றடையும் பாதையில்தான் நிச்சயமாக அவன் நடந்து செல்வான்!

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, அச்சம் நிறைந்த ஊரின் பாதையில் செல்வதும் பிறகு விதியை ஆதாரமாகக் காட்டுவதும் அறிவுடைய எந்த மனிதனுக்கும் சாத்தியமாகாது!

அப்படியானால் மறுமை விவகாரத்தில் சுவனத்தின் பாதையை விடுத்து நரகத்தின் பாதையில் ஏன் மனிதன் செல்கிறான்? பிறகு விதியை அதற்கு ஏன் ஆதாரமாகக் காட்டுகிறான்?

இன்னோர் உதாரணம்:

நோயாளியைப் பார்க்கிறோம். மருந்து உட்கொள்ளுமாறு அவருக்குச் சொல்லப்படுகிறது. மனம் ஒப்பாதிருக்கும் நிலையிலும் அதனை அவர் அருந்துகிறார். மேலும் அவருக்குத் தீங்கு அளிக்கக் கூடிய உணவைத் தவிர்த்துக் கொள்கிறார். அவரது மனம் அந்த உணவைப் பெரிதும் விரும்பும் நிலையிலும் அதனை உட்கொள்வதில்லை! இதுவெல்லாம் நிவாரணமும் நிம்மதியும் கிடைப்பதற்காகத்தான்!

அவர் மருந்தையும் உட்கொள்ளாமல், தீங்கு விளைவிக்கக் கூடிய உணவையும் தவிர்க்காமல், சாவின் விளிம்புக்கு வந்து, விதியை ஆதாரமாகக் காட்டுவது அறிவுடைமையல்ல! பிறகு அல்லாஹ்வும் அவனுடைய ரஸூலும் ஏவிய செயல்களை மனிதன் ஏன் விட்டு விடுகிறான்? அவர்கள் தடை செய்த காரியங்களை ஏன் செய்கிறான்? பிறகு அதற்கு விதியை ஏன் ஆதாரமாகக் காட்டுகிறான்?

7. கடமைகளை விட்டு விடுவதற்கும் பாவங்களைச் செய்வதற்கும் விதியை ஆதாரமாகக் காட்டுகிற ஒருவர் மீது வேறொரு மனிதர் அநீதி இழைத்தால் — அவரது பொருளை அபகரித்தால், அவரது மரியாதைக்கு களங்கம் ஏற்படுத்தினால் — அதற்கு விதியை ஆதாரமாகக் காட்டினால் — அதாவது ''என்னை நீ நிந்திக்காதே, எனது அத்துமீறல் அல்லாஹ் விதித்த விதிப்படியே நடந்தது'' என்று கூறினால் அந்த ஆதாரத்தை அவர் ஏற்றுக்கொள்வாரா? மாட்டார்தானே!

வேறொருவர் அவருக்கு அக்கிரமம் செய்துகொண்டு விதியை ஆதாரமாகக் காட்டுவதை அவர் ஏன் ஏற்றுக் கொள்வதில்லை? ஆனால், அவர் அல்லாஹ்வுக்கு அக்கிரமம் செய்து கொண்டு அதற்கு விதியை எப்படி ஆதாரமாகக் காட்டுகிறார்?

வரலாற்றில் கூறப்படுகிறது: அமீருல் முஃமினீன் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களிடம் — கை வெட்டப்பட வேண்டிய அளவுக்கு குற்றம் புரிந்த பக்காத் திருடன் ஒருவன் கொண்டு வரப்பட்டான். உமர் (ரலி) அவர்கள் அவனது கையை வெட்டும்படி ஏவினார்கள்.

அப்போது அவன் கூறினான். ''அமீருல் முஃமினீன் அவர்களே, அல்லாஹ் விதித்த விதிப்படிதான் நான் திருடினேன்.''

உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்: ''நாங்கள் உனது கையை வெட்டுவதும் அல்லாஹ் விதித்த விதிப்படிதான்.''

**விதியின் மீது நம்பிக்கைக் கொள்வதன் மகத்தான பயன்களுள் சில:**

1. காரண காரியங்களைச் செய்யும் போது அந்தக் காரணியின் மீதே சார்பு கொள்ளாமல் அல்லாஹ்வின் மீது முழுவதுஞ் சார்பு கொள்வது — ஏனெனில் அல்லாஹ் விதித்த விதிப்படியே ஒவ்வொன்றும் நடக்கிறது!

2. நாடிய காரியம் நிறைவேறிடும் போது மனிதன் தற்பெருமை கொள்ளாதிருப்பது - ஏனெனில் அது நிறைவேறியது அல்லாஹ்வின் அருளினாலாகும். அவன்தான் நன்மை மற்றும் வெற்றிக்கான காரணிகளை நிர்ணயித்து வைத்தான். அது குறித்து மனிதன் தற்பெருமை கொள்வது இந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதைவிட்டும் அவனை மறக்கடித்து விடும்!

*3. அல்லாஹ் நிர்ணயித்த விதிப்படி காரியங்கள் நடைபெறுகிற போது அது குறித்து மனிதன் மனநிம்மதியும் சாந்தியும் அடைவது — 'தான் விரும்பியது தவறிவிட்டதே' என்றோ, 'தான் வெறுக்கும் காரியம் நடந்து விட்டதே' என்றோ மனக்கலக்கம் அடைவதில்லை. ஏனெனில், அது, வானம் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் யார் கைவசம் உள்ளதோ அந்த ஏக இறைவன் நிர்ணயித்துள்ள விதிப்படி ஏற்பட்டதாகும். அது சந்தேகமின்றி நடந்தே தீரும்!*

*இது குறித்து அல்லாஹ் கூறுகிறான்: ''பூமியில் ஏற்படுகிற அல்லது உங்களின் மீது இறங்குகிற எந்தத் துன்பமானாலும் — அதனை நாம் உருவாக்குவதற்கு முன்பு அதைக் குறித்து ஓர் விதி ஏட்டில் எழுதி வைக்காமல் இல்லை. அப்படிச் செய்வது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதாகும். (இவை அனைத்தும்) எதற்காகவெனில், உங்களுக்கு எந்த நஷ்டம் ஏற்பட்டாலும் நீங்கள் மனம் துவண்டுவிடக் கூடாது. மேலும் அல்லாஹ் உங்களுக்கு வழங்கியிருப்பதைக் கொண்டு நீங்கள் பூரித்துப் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான்! தம்மையே பெரிதாக நினைத்துக் கொள்கிற பெருமை பேசித் திரிகிற எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.''* *(57:22, 23)*

عَجَبًا لِأَمْرِ الْمُؤْمِنِ إِنَّ أَمْرَهُ كُلَّهُ خَيْرٌ، وَلَيْسَ ذٰلِكَ لِأَحَدٍ إِلَّا
لِلْمُؤْمِنِ، إِنْ أَصَابَتْهُ سَرَّاءُ شَكَرَ، فَكَانَ خَيْرًا لَهُ، وَإِنْ أَصَابَتْهُ
ضَرَّاءُ صَبَرَ، فَكَانَ خَيْرًا لَهُ.

*அண்ணல்நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: ''ஓர் இறை நம்பிக்கையாளரின் நிலைமை குறித்து ஆச்சரியப்படுகிறேன்! அவனுடைய விஷயங்கள் அனைத்தும் நன்மையாகவே உள்ளன. இறை நம்பிக்கையாளனுக்கே தவிர வேறு*

யாருக்கும் இந்நிலை வாய்க்கப் பெறவில்லை. அவனுக்கு மகிழ்வு நிலை ஏற்பட்டால் (இறைவனுக்கு) நன்றி செலுத்து கிறான். அது அவனுக்கு நன்மையாக அமைகிறது. ஏதேனும் துன்பம் ஏற்பட்டால் பொறுமை காக்கிறான். அதுவும் அவ னுக்கு நன்மையாக ஆகிறது!'' — ஸஹீஹ் முஸ்லிம்

**விதிபற்றிய கொள்கையில் இரு குழுவினர் வழிதவறிப் போனார்கள்:-**

ஒரு குழு 'ஜப்ரிய்யா' என்போர். இவர்கள் சொல்கிறார் கள்: ''மனிதன் தனது செயலில் நிர்ப்பந்திக்கப்படுபவனாக இருக்கிறான்; அவனுக்கு அதில் சுய நாட்டமோ ஆற்றலோ இல்லை.''

இரண்டாவது குழு 'அல்கத்ரிய்யா' என்போர். இவர்கள் கூறுகிறார்கள்: ''மனிதன் தனது செயலில் சுய விருப்பத்துட னும் ஆற்றலுடனும் தனி நிலையுடையவனாக இருக்கிறான்; அதில் இறைவனின் நாட்டத்திற்கோ ஆற்றலுக்கோ எந்த சம்பந்தமும் கிடையாது!''

முதல் குழுவினருக்கு இறைமார்க்கமும் யதார்த்த நிலை யும் அளிக்கும் பதில்:-

இறைமார்க்கம் —

நிச்சயமாக அல்லாஹ் மனிதனுக்கு சுயநாட்டமும் விருப் பமும் இருக்கச் செய்து அவனுடன் அவனது செயலை இணைத்துள்ளான்.

அல்லாஹ் கூறுகிறான்:

''உங்களில் இவ்வுலகை நாடுவோரும் உள்ளனர். மறுவு லகத்தை நாடுவோரும் உள்ளனர்.'' (3:152)

மேலும் கூறுகிறான்:

''(நபியே), தெளிவாகக் கூறிவிடும்: இது உங்கள் இறை வனிடம் இருந்து வந்துள்ள சத்தியமாகும். இனி நம்பிக்கை

*கொள்ள விரும்புவோர் நம்பிக்கைக் கொள்ளட்டும். நிராகரிக்க விரும்புவோர் நிராகரிக்கட்டும். (நிராகரிக்கக் கூடிய) கொடுமையாளர்களுக்குத் திண்ணமாக நாம் ஒரு நெருப்பை தயார் செய்து வைத்திருக்கிறோம். அதன் சுவாலைகள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்கின்றன.'' (18:28-29)*

இன்னும் கூறுகிறான்:

*''யாரேனும் நற்செயல் புரிந்தால் அவர் தனக்கே நன்மை செய்து கொள்கிறார். மேலும் யாரேனும் தீமை செய்தால் அதன் தீய விளைவு அவரையே சாரும். மேலும் உம் இறைவன் தன் அடியார்களுக்கு கொடுமையிழைப்பவன் அல்லன்.'' (41:46)*

## யதார்த்த நிலை:

*உண்ணல், பருகல், கொடுக்கல் — வாங்கல் போன்ற சுயநாட்டத்துடன் செய்கிற செயல்களுக்கும், காய்ச்சலினால் ஏற்படும் நடுக்கம், மாடியில் இருந்து விழுதல் போன்ற சுயநாட்டமின்றி நடைபெறுகிற செயல்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை ஒவ்வொரு மனிதனும் நன்கு அறிகின்றான். முதல் வகையில் எவ்வித நிர்ப்பந்தமுமின்றி — நாட்டத்துடன் செயல்படுகிற சுயாதிகாரம் உடையவனாக மனிதன் இருக்கிறான். இரண்டாவது வகையில் சுயாதிகாரமற்றவனாகவும் — நடைபெற்றதை நாடாதவனாகவும் இருக்கிறான்!*

*இரண்டாவது குழுவினருக்கு இறைமார்க்கமும் பகுத்தறிவும் அளிக்கும் பதில்:*

## இறைமார்க்கம்:-

*அல்லாஹ்தான் ஒவ்வொரு பொருளையும் படைத்தான். ஒவ்வொன்றும் அவனது நாட்டத்தின்படியே நடைபெறுகிறது.*

அல்லாஹ், குர்ஆனில் மனிதர்களின் செயல்கள் யாவும் அல்லாஹ்வின் நாட்டத்தின்படியே நிகழ்கின்றன என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளான்.

ஓரிடத்தில் —

''அல்லாஹ் நாடியிருந்தால் அந்தத் தூதர்களுக்குப் பின்னர் வந்தவர்கள், தெளிவான அத்தாட்சிகள் தம்மிடம் வந்த பின்னரும் தமக்குள்ளேயே போரிட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் (அவர்களை அதிலிருந்து கட்டாயமாகத் தடுத்து நிறுத்துவது அல்லாஹ்வின் நாட்டமல்ல) அவர்கள் தமக்குள் வேறுபட்டுக் கொண்டனர். அவர்களில் சிலர் இறைநம்பிக்கை கொண்டனர்; வேறு சிலர் நிராகரித்தனர். அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் போரிட்டிருக்க மாட்டார்கள். ஆயினும் அல்லாஹ் தான் நாடுகிறவற்றைச் செய்கிறான்.'' (2:253)

இன்னோர் இடத்தில் —

''நாம் நாடியிருந்தால் ஆரம்பத்திலேயே ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அதன் நேர்வழியைக் காட்டியிருப்போம். ஆயினும் ஜின்கள் மற்றும் மனிதர்கள் அனைவரைக் கொண்டும் நான் நரகத்தை நிரப்புவேன் என்று நான் கூறியிருந்த எனது வாக்கு நிறைவேறிவிட்டது.'' (32:13)

இப்பேரண்டம் முழுவதும் அல்லாஹ்வின் உடைமையாகும். மனிதனும் இப்பேரண்டத்தைச் சேர்ந்தவன்தான்! எனவே அவனும் அல்லாஹ்வின் உடைமைதான்! ஓர் அடிமை அவனுடைய எஜமானின் உடைமையில் ஆதிக்கம் செலுத்துவது சாத்தியமில்லை, எஜமானனது அனுமதி மற்றும் நாட்டத்தைக் கொண்டே தவிர!

# இஸ்லாமியக் கொள்கையின இலக்குகள்

இஸ்லாமியக் கொள்கையின் இலக்குகள் என்பது அதனைக் கடைப்பிடித்து வாழ்வதனால் விளையும் உயர்ந்த குறிக்கோள்கள், நோக்கங்களைக் குறிக்கும். இவை ஏராளமாகவும் பல்வேறு வகையிலும் உள்ளன. அவற்றுள் சில வருமாறு:-

1. எண்ணத்தையும் வழிபாட்டையும் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாக்குவது. ஏனெனில், அவனே படைத்த இறைவன்; அவனுக்கு யாதொரு இணை — துணை இல்லை. எனவே நாடுவதும் வழிபடுவதும் அல்லாஹ் ஒருவனுக்காகவே என்றிருக்க வேண்டும்.

2. உள்ளத்தில் இந்தக் கொள்கை இல்லாதிருக்கும் போது எப்படிப்பட்ட தடுமாற்றம் ஏற்படுகிறதோ அதிலிருந்து அறிவும் சிந்தனையும் விடுதலை பெறுகிறது.

ஏனெனில், இந்தக் கொள்கையை ஏற்காத மனிதனின் நிலை இருவகைப்படும். ஒன்று, அவனது உள்ளம் எந்த ஒரு கொள்கையையும் ஏற்காமல் புலனுக்குட்பட்டவற்றை மட்டும் வழிபடுபவனாக இருப்பது! அல்லது வழிகெட்ட கொள்கைகளிலும் மௌட்டீகங்களிலும் சிக்கித் தடுமாறிக் கொண்டிருப்பது!

3. மனஅமைதி பெறுவது, சிந்தனை அமைதியாவது:

— மனம் கலக்கமடையாது; சிந்தனை தடுமாறாது! ஏனெனில், இந்தக் கொள்கை மீது உறுதியான நம்பிக்கை கொண்ட ஓர் அடியானை அந்தக் கொள்கையானது அவனைப் படைத்தவனிடம் கொண்டு சேர்க்கிறது. தன்னைப் பரிபாலித்து நிர்வகிப்பவனாகவும் சட்டம் வகுத்துத்தரும் அதிபதியாகவும் அவனை அந்த அடியான் ஏற்றுக் கொள்கிறான். அந்த இறைவன் நிர்ணயித்த விதி குறித்து அவனது

மனம் நிம்மதி அடைகிறது. அவனது உள்ளம் இஸ்லாத்தின் பால் தெளிவடைகிறது. அதனை விடுத்து பிறிதொரு மார்க் கத்தை அவன் நாடுவதில்லை!

4. அல்லாஹ்வை வணங்கி வழிபடுதலில் வழிதவறிப் போவதைவிட்டும் பிற படைப்பினங்களுடன் இணைந்து வாழ்வதில் வழி பிறழ்ந்து போவதைவிட்டும் சிந்தனையும் செயலும் ஈடேற்றம் அடைவது.

— ஏனெனில் இந்தக் கொள்கையின் அடிப்படைகளில் ஒன்று நபிமார்களின் மீது ஈமான் - நம்பிக்கை கொள்வதா கும். இந்த நம்பிக்கை, அவர்களின் வழியைப் பின்பற்றி வாழும் மக்களுக்கு சாந்திக்கும் ஈடேற்றத்திற்கும் பொறுப் பேற்கக் கூடியதாக உள்ளது!

5. எந்த விஷயங்களிலும் வன்மையாகவும், உறுதியாக வும் இருத்தல்! எவ்வாறெனில் நற்செயல் ஆற்றுவதற்கான எந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தாமல் விடுவதில்லை; நன்மையை எதிர்பார்த்து. மேலும் பாவம் நடைபெறும் இடத்தைக் கண்டால் தூர விலகி விடுவது, இறைத் தண்ட னைக்கு அஞ்சி!

ஏனெனில், இந்தக் கொள்கையின் அடிப்படைகளில் ஒன்று, மறுமையின் மீதும் நற்கூலி - தண்டனையின் மீதும் நம்பிக்கைக் கொள்வதாகும்

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

''ஒவ்வொருவருக்கும் அவரவரின் செயல்களைப் பொறுத்து சில படித்தரங்கள் உள்ளன. உம் இறைவன் அவர்கள் செய்கிற செயல்களைப் பற்றி கவனமற்றவனாக இல்லை.'' (6: 132)

அண்ணல்நபி (ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீஸில் இந்த நோக்கத்தின் மீது ஆர்வமூட்டியுள்ளார்கள்:

الْمُؤْمِنُ الْقَوِيُّ خَيْرٌ وَأَحَبُّ إِلَى اللهِ مِنَ الْمُؤْمِنِ الضَّعِيفِ، وَفِي
كُلٍّ خَيْرٌ، اِحْرِصْ عَلَى مَا يَنْفَعُكَ وَاسْتَعِنْ بِاللهِ، وَلَا تَعْجَزْ
وَإِنْ أَصَابَكَ شَيْءٌ فَلَا تَقُلْ لَوْ أَنِّي فَعَلْتُ كَذَا وَكَذَا وَلٰكِنْ
قُلْ: قَدَّرَ اللهُ، وَمَا شَاءَ فَعَلَ، فَإِنَّ لَوْ تَفْتَحُ عَمَلَ الشَّيْطَانِ

''பலமிக்க இறைநம்பிக்கையாளன் பலவீனமான நம்பிக்கையாளனை விட சிறந்தவனாகவும் அல்லாஹ்வுக்குப் பிரியமானவனாகவும் இருக்கிறான். ஆனாலும் ஒவ்வொருவரிடமும் நன்மை உண்டு. உனக்குப் பயனளிக்கும் செயல்களில் ஆர்வம் கொள்! மேலும் அல்லாஹ்விடம் உதவி தேடு! இயலாமலாகிவிடாதே! உனக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், 'நான் இப்படி இப்படி செய்திருந்தால் இது வந்திருக்காதே' எனச் சொல்லாதே! மாறாக 'அல்லாஹ் விதித்தது; அவன் நாடியதைச் செய்துள்ளான்' எனச் சொல்! ஏனெனில், 'இப்படிச் செய்திருந்தால்' எனும் நிபந்தனைச் சொல் ஷைத்தானின் செயல்பாட்டிற்கு வழிதிறந்து விடலாம்.''

— ஸஹீஹ் முஸ்லிம்

6. ஆற்றல் மிக்கதொரு சமுதாயத்தை உருவாக்குதல்! எத்தகைய சமுதாயமெனில் அது தனது தீனை — இறைமார்க்கத்தை உறுதிப்படுத்துவதற்காக, அதன் அடிப்படைகளை வலுப்படுத்துவதற்காக தனது சக்தி முழுவதையும் செலவிட வேண்டும்; அல்லாஹ்வின் வழியில் தனக்கு நேரும் எந்தத் துன்பங்களையும் அது பொருட்படுத்தாது!

இது குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

''உண்மையில் இறைநம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கைக் கொள்கி

*றார்கள். பிறகு அவர்கள் எவ்வித ஐயமும் கொள்வதில்லை. மேலும் தங்களுடைய பொருட்களாலும் உயிர்களாலும் அல்லாஹ்வின் வழியில் போராடுகிறார்கள். அத்தகையவர்கள் தாம் உண்மையாளர்கள்.''* *(49:15)*

*7. தனி மனிதர்களையும் சமுதாயங்களையும் சீர்படுத்துவதன் மூலம் இம்மை மறுமையின் நற்பேற்றை அடைவது; நன்மையையும் நன் மதிப்புகளையும் பெறுவது!*

*இது குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:*

مَنْ عَمِلَ صَالِحًا مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهٗ
حَيٰوةً طَيِّبَةً ۚ وَلَنَجْزِيَنَّهُمْ اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ ۝٩٧

*''ஆணாயினும் பெண்ணாயினும் — எவர் இறை நம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகிறாரோ அவரை (இவ்வுலகில்) தூய வாழ்வு வாழச் செய்வோம். (மறுமையிலும்) அத்தகையோருக்கு அவர்களின் உன்னதமான செயல்களுக்கு ஏற்ப நாம் கூலி வழங்குவோம்.''* *(16:97)*

*இஸ்லாமியக் கொள்கை, கோட்பாட்டின் ஒருசில குறிக்கோள்களாகும் இவை. அல்லாஹ்விடம் நாம் பிரார்த்தனை செய்கிறோம். இக்கொள்கையைக் கடைப்பிடித்து வாழும் பேற்றை நமக்கும் முஸ்லிம்கள் அனைவருக்கும் அல்லாஹ் வழங்குவானாக!*

# شرح

# أصول الإيمان

تأليف :

الشيخ محمد بن صالح العثيمين

ترجمة :

مستان علي أبو خالد

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالنسيم
الرياض - حي النسيم - مقابل العيادات الخارجية لمستشفى اليمامة
هاتف ٢٢٦٨٢٢٦٠ - ٢٢٥٠١٩٤ - فاكس ٢٢٠١٤٦٥
ص.ب ٥١٥٨٤ الرياض ١١٥٥٣

التأصيلية

٦٥